மகாத்மா காந்தி

வாழ்க்கையில்

ரசமான சம்பவங்கள்

PRESENTED BY:
V. PR. PL. M.
5663

15-8-47

விடுதலைநாள் வெளியீடு

இலக்கியப் பதிப்பகம்

காரைக்குடி

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI

Y. M. C
ASSOCIATION
PAGANERI
பாகனேரி

18583 (10)
4683 (48)
17877 (3)

5629

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI

26.3.81

ILAKKIA PATHIPPAHAM.
BOOK-SELLERS AND PUBLISHERS,
KARAIKUDI S. I. RY.



மகாதேவும் மகாத்மாவும்

15-8-47.

விடுதலைநாள் வெளியீடு

மகாத்மா காந்தி

வாழ்க்கையில்

ரசமான சம்பவங்கள்

ஆசிரியர்: ஜி. ராமச்சந்திரன்

தமிழாக்கம்: டி. ஆர். அருணாசலம்

கிடைக்குமிடம்:

இலக்கியப் பதிப்பகம்

காரைக்குடி.

விலை ரூபாய் : ஒன்றரை

கலைப்பண்ணை வெளியீடு
புதுக்கோட்டை.

S. I. P. காரைக்குடி P. I. C. R/ 10. 1500.
கலைப்பண்ணை, புதுக்கோட்டை. L. Dis 14774

தோழமையில் மிக்கதுணை நல்லாள்
என் மனைவி
சௌந்தரத்துக்கு.

பதிப்புரை

சத்தியபோதகர் மகாத்மாவைப் பற்றிய செய்திகளை மக்கள் தெரிந்துகொள்ள ஆசைப்படுவது இயற்கை. மகாத்மாவின் தத்துப் புத்திரன் திரு. ஜி. ராமச்சந்திரன் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியதை, 'நவயுகப் பிரசுராலய' நிர்வாகி திரு. டி. ஆர். அருணாசலம் அவர்கள் சரளமான நடையில் தமிழாக்கித் தந்திருக்கிறார்கள். "மகாத்மா காந்தி வாழ்க்கையில் ரசமான சம்பவங்கள்" என்ற (A Sheaf of Gandhi Anrecdotes) இந்த தொகுப்பு நூலைத் தமிழில் வெளியிட அனுமதித்த 'பம்பாய் ஹிந்த் கிதாப்ஸ் கம்பெனி' யாருக்கும், தமிழ்ப் படுத்திய திரு. அருணாசலம் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

தமிழ் மக்கள் விரும்பிப் படிப்பதற்கு ஏற்ற இந்த நூலை இந்திய விடுதலை நன்னாளான இன்று தமிழ்த்தாயின் மலரடிகளில் வைத்து வணங்குகிறோம். கன்னித் தமிழ் வாழ்க.

வே. சோமையா
கலைப்பண்ணை.

புதுக்கோட்டை
15-8-47

அணிந்துரை

நெருங்கிப் பழகப்பழக நாம் வைத்துள்ள மதிப்பும் அன்பும் குறையாது வளரச் செய்யும் பாங்குடைய மனிதர் யாராவது இருக்கக் கூடுமானல், அவர் காந்திஜிதான்.

'உண்மையான பெரிய மனிதர்களாக விருக்கிற எல்லோருடைய விஷயத்திலும் இது உண்மையாக இருக்கக்கூடும். இருந்தாலும், காந்திஜி விஷயத்தில் உண்மை யென்பது நானறிந்த அனுபவம். எவ்வளவுக் கெவ்வளவு நாம் அவரோடு நெருங்கிப் பழகி சேர்ந்துழைக் கிருேமோ அவ்வளவுக் கவ்வளவு அவர்மீது அன்பும், வியப்பும் அதிகரிக்கிறது. இந் நூலாசிரியர் காந்திஜியை சும்மா போற்றுகிறவர் மட்டும் அல்லர்; அவரிடம் உள்ளன்பு கொண்டவர். 'உள்ளதைக் காணுது உள்ளன்பு' என்று சொல்லுவது அபத்தமானது. அதற்கு மாருக உள்ளன்புதான் உள்ளதை உள்ளபடி காண்கிறது.

காந்திஜியைப் போற்றுகிறவர்கள் எத்தனையோ பேர் அவருக்கருகில் இருக்கிருர்கள். ஆனல், அவர்கள் அத்தனைபேரும் நகைச்சுவை உள்ளவர்களென்றே, தற்கால வாசகர்களுக் கேற்றபடி விஷயங்களை, சொகுசாக எழுதக்

கூடியவர்களென்றே சொல்ல முடியாது. காந்திஜியைப்பற்றி உண்மைச் சம்பவங்களைக் கூறும் இந்நூலுக்கு பொது மக்கள் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறார்கள். உண்மைச் சம்பவங்களை அறியவேண்டுமென்ற ஆவல் இப்பொழுது அதிகம் ஏற்பட்டிருக்கிறது. தெரிந்தவர்கள் யாராவது உண்மைக் கதைகளைத் தெரிவிக்காவிட்டால் கட்டுக்கதைகள் கணக்கில்லாமல் நிறைந்துவிடும்.

சென்னை
அக்டோபர்,
28, 1945

ச. இராசகோபாலாச்சாரி.

முன்னுரை

இதில் வரும் சிறு சம்பவங்களைச் சில வருஷங்களுக்கு முந்தி சேகரித்து பத்திரமாக எனது குறிப்பில் வைத்திருந்தேன். 1942-3ல் அரசியல் கைதியாக நான் சிறையில் இருந்த பொழுது அவைகளை இந்த உருவத்தில் எழுதிப் பார்த்தேன்; ஆனந்தமாக இருந்தது. அதற்கப்புறம் இதை வெளியிடலாமா என்பது எனக்குப் பெரிய யோசனையாகி விட்டது. இவை காந்திஜியைப் பற்றிய அந்தரங்க விஷயங்களல்லவா என்று நினைத்தேன். இருந்தாலும் சாதாரண வாழ்க்கை வரலாற்றைக் காட்டிலும் இக்காட்சிகளே காந்திஜியைத் தெளிவாக எடுத்துக்காட்டும் என்ற நம்பிக்கை தோன்றியது; தயக்கத்தைத் தள்ளிவிட்டேன்.

இச்சம்பவங்களிற் சில நான் நேரிலறிந்தவை. மற்றுஞ் சில காந்திஜியின் அந்தரங்க நண்பர்கள் கூறியவை.

சேவாக்கிராமம்
வர்தா
6—9—45.

ஜி. ராமச்சந்திரன்.

உள்ளுரை

1. திருத்தவே முடியாத ஆன்ட்ரூஸ்
2. காந்திஜியும் குருட்டுப் பெண்ணும்
3. மகாத்மாவும் மூடபக்தியும்
4. காந்திஜியும் குற்றமற்ற பொய்யும்
5. காந்திஜியும் காப்பிப் பிரியரும்
6. அன்னையும் அண்ணலும்
7. காந்திஜியும் காலந்தவறாமையும்
8. மகாத்மாவும் முதலாளித்துவமும்
9. காந்திஜி ஓய்வுபெறும் முறை
10. காந்திஜியும் பயமுறுத்தலும்
11. காந்திஜியும் பள்ளியாசிரியரும்
12. காந்திஜியும் பள்ளி அறையும்
13. அண்ணலும் ஹரிஜன் ரெங்கண்ணாவும்
14. காந்திஜியும் சீனவாலிபனும்
15. பாபுவும் புரட்சிக்காரனும்

மேற்கும் கிழக்கும்

திருத்தவே முடியாத ஆன்ட்ரூஸ்

காந்திஜி ஓர் அபூர்வப் பிறவி; அற்புதமான சாந்தமும், அசைக்க முடியாத உறுதியையும் கொண்டவர். ரோஜா இதழின் மென்மையும் எஃகின் உறுதியும் ஏக காலத்தில் கொண்டுள்ளது அவர் மனம். சில விஷயங்களில் ஸி. எப். ஆன்ட்ரூஸைக் காந்திஜியோடு பூரணமாக ஒப்பிடலாமாயினும் கடின சித்தமோ, உறுதியோ அவரிடம் காண முடியாது. சில சமயம் அவருடைய உதார குணம் விவேகத்தையும் தாண்டிவிடும்.

1926-ல் ஒரு நாள் ஆன்ட்ரூஸ் காந்திஜியுடன் சபர்மதி சத்யாக்ரக ஆஸ்ரமத்தில் தங்கி இருந்தார். சகல பொதுவேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, தான் விரும்பியவற்றை எழுதிக் கொண்டு, காந்திஜியுடன் இருந்து ஓய்வு பெறுவதையே அடிக்கடி அவர் பெரிதும் விரும்புவதுண்டு. இம்மாதிரியான ஒரு சந்தர்ப்பத்தில் தமிழ் நாட்டிலிருந்து ஒரு காங்கிரஸ் ஊழியர் சபர்மதிக்கு வந்தார்; வந்தவர் இளைஞர்; மிகுந்த துன்பத்திற்கு உள்ளானவர்; ஜில்லாக் கமிட்டி ஒன்றின் காரியதரிசியாக இருந்தவர். ஜில்லாவின் காங்கிரஸ் வேலைக்காக, அவரிடம் ஏராளமாகப் பணம் வந்து குவிந்தது. திறமையான செயலாளரைப் போன்று, பெரும்பகுதிப் பணத்தைப் பொறுப்புணர்ந்து, பல வழிகளிலும் அவர் செலவு செய்துவிட்டார். ஆனால் அதில் ஒரு சிறு தவறு நடந்துவிட்டது. அவர் ஒழுங்கான கணக்குகள் வைத்துக்கொள்ள

வில்லை. மேலும், பணம் பெற்றதற்கு ரசீதோ செலவு இனங்கட்கு வவுச்சரோ எதுவும் அவரிடம் இல்லை. இதனால் ஏற்பட்ட பலன் என்ன? தன் கமிட்டிக்கு ரூபாய் ஆயிரத்துக்குச் சரியான கணக்குக் கொடுக்க வேண்டும். இல்லையேல் ரொக்கம் செலுத்த வேண்டும். இதைக் கேட்டதும் அவர் திகைத்துவிட்டார். தனக்காக தம்படிகூட எடுக்கவில்லை; முழுதும் காங்கிரஸ் வேலைக்கே செலவழிக்கப்பட்டது என்பதில் இம்மிகூடச் சந்தேகமில்லை. ஒழுங்கான கணக்கு வேண்டுமென்பதை அவரும் மறுக்கவில்லை. ஆனால் அதுதான் இல்லையே! அதற்காக ரூ 1000 தயாரிப்பது அவ்வளவு சுலபமுமில்லை. அவரோ ஊதியம் பெறும் ஊழியரல்ல. ஏதோ சேவையின்மீது கொண்ட அபாரப் பற்றுதல் காரணமாக பள்ளி ஆசிரியர் வேலையை உதறித் தள்ளிவிட்டு இப்பணியை மேற்கொண்டவர். இப்போதோ கலக்க முற்றிருக்கிறார். இந்நிலையில் என்ன செய்யலாம்? திடீரென ஒரு யோசனை தோன்றியது. 'காந்திஜியிடம் போய் விஷயத்தைக் கூறி நன்றியே இல்லாத கமிட்டியாரிடமிருந்து தன்னைக் காப்பாற்றுமாறு கேட்பது' என்ற முடிவுக்கு வந்தார்.

அவர் சொன்ன கதை முழுவதையும் காந்திஜி பொறுமையுடன் கேட்டார். ஆன்ட்ரூஸும் அருகில் இருந்து, துன்பம், வெறுப்பு நிறைந்த காரியதரிசியின் பரிதாபக் கதையை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தார். விஷயத்தைப் பூரணமாகத் தெளிவாக்கிக் கொள்ளும் பொருட்டு காந்திஜி நுட்பமான, அன்பான, உறுதியான பலவகைக் கேள்விகளை அவரிடம் கேட்டார். இளைஞன் பணத்

தைக் கையாடல் செய்யவில்லை என்றும், ஆனால் சரியான கணக்கு வைத்துக்கொள்ளாதது தான் தவறு என்பதையும் கண்டுகொண்டார்.

"நான் என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?" என அவரைக் கேட்டார் காந்திஜி.

தான் நிரபராதி என்பதைத் தெளிவாகத் தனது ஜில்லாக் கமிட்டிக்கு எழுதித் தெரிவிக்க வேண்டுமென அவ்விளைஞர் விரும்பினார். ஆன்ட்ரூஸ் இதற்குப் பூரண அனுசரணையாகவே இருந்தார். ஆனால், காந்திஜியோ கடின சித்தம் கொண்டார்.

"இல்லை; அம்மாதிரி நான் எழுத முடியாது. உன் நடத்தை மன்னிக்க முடியாதது என்பதில் சந்தேகமே இல்லை! பொது நிதியின் ஒவ்வொரு தம்படியும் புனிதமாகப் பாதுகாக்கப்பட வேண்டியவை. அதில் கவனக் குறைவு கூடவே கூடாது. தம்படியேயாயினும் சரியான கணக்கு இல்லாவிட்டால் அதைக் கையாடல் செய்ததாகவே நான் கருதுவேன். ஒரு பொதுஜன ஊழியர் சரியான கணக்கு வைத்துக்கொள்வதென்பது கேவலம் பைசாவைப் பொறுத்த விஷயம் மட்டும் அல்ல; அவரின் ஒழுக்கத்திலே ஒரு சிறந்த பகுதியும் ஆகும். இப்பொழுது நீ பெரும் பகுதிக் கணக்கை எழுது; அவசியமான வவுச்சர்களை வாங்கு; தவறினால் உன்னிடம் பணத்தைக் கோர அக்கமிட்டிக்கு முழு உரிமையும் உண்டு; அவசியம் ஏற்படின் இக்கடனைத் தீர்க்க உன் சொத்தையோ, இதர உடைமைகளையோ நீ விற்று, கமிட்டிக்குச் செலுத்த வேண்டிய

பணத்தைச் செலுத்திவிட வேண்டும்'' என்றார் காந்திஜி.

இளைஞர் இடிந்தேவிட்டார்! இதற்கு முன் அவர் மகாத்மா முன்னிலையில் வந்ததே இல்லை. காந்திஜியின் புனிதமான அனுதாபத்தையும், அனுசரணையையுமே எதிர்பார்த்து வந்தார். ஆனால்..........? ஆகவே மனமுடைந்து குழந்தையைப் போல அவர் அழுதார்.

ஆண்ட்ரூஸ் நிரம்பத் துக்கம் அடைந்தார். அவர் 'பச்சாத்தாபப்பட்டு வருந்துபவனிடம் நாம் இவ்விதம் நடந்துகொள்ளலாகாது' எனக் காந்திஜியுடன் தர்க்கித்தார்.

"ஆம்; அவர் மனம் நொந்துகொள்வது நலமே. தன்னை முழுதும் திருத்திக்கொள்ளும் முறையில் அவர் பச்சாத்தாபப்பட்டு வருந்துவது அவசியமாகும். கேவலம், மனம் நொந்து வருந்துவதால் மட்டும் பிரயோசனமில்லை. செய்தவற்றை உணர்ந்து, திருத்திக்கொள்வதுதான் பச்சாத்தாபம் உறுவதனால் ஏற்பட வேண்டிய உண்மையான பலன். நம்முன் உள்ள விவகாரத்தில், பூராக் கணக்கையோ பணத்தையோ கேட்கக் கமிட்டிக்கு உரிமை உண்டு. அவர் காங்கிரஸ்வாதி; படித்தவர், ஊதியம் பெறவில்லை; விரும்பியே பணி செய்கிறார். இவை அவர் பொறுப்பை இன்னும் அதிகப்படுத்தவில்லையா? ஒவ்வொரு காங்கிரஸ் வாதியிடமும் இருக்க வேண்டிய கண்ணியம் அவருக்கும் உண்டல்லவா? ஆகவே, அவர் திரும்பிப் போய் எவ்வகையாலும் பணத்தைப் பெற்று, பைசா கூடக் குறையாமல் பணத்தைக் கமிட்டிக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அதன் பின்னரே நான் அவருக்கு

ஏதாவது உதவி செய்யக் கூடும்" எனக் காந்திஜி கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

அப்பொழுது மற்றொரு கஷ்டம். அவர் ஊர் திரும்புவதற்குப் போதிய பணம் அவரிடம் இல்லை. குறைந்தது ரூ 35 வேண்டும்.

ஆன்ட்ரூஸின் மனம் இளகியது! "நிரம்பச் சரி பாபு! கோரிய பணத்தைப் பெறும் பொருட்டு, மிக விரைவாக அவர் ஊர் செல்வதற்கு, வழிச் செலவுக்காவது பணம் கொடுத்தனுப்புவோமே?" என்றார்.

காந்திஜி மிகவும் உறுதியான குரலில், "இல்லை, நாம் எங்கிருந்து ரூ 35 கொடுப்பது? நாம் இருவரும் தம்படிகூட இல்லாதவர்கள். நம் மேற்பார்வையில் உள்ள பொதுப் பணத்தில் இருந்துதான் நாம் கொடுக்க முடியும். அவ்வாறு செய்வது பெருந் தவறாகும். பொருள் இல்லையானால் மெதுவாக வீடு நோக்கி அவர் நடந்துசெல்ல வேண்டியதுதான்! ஏற்கெனவே கமிட்டிக்குக் கடன் பட்டுள்ளார். நாம் வேறு கொடுப்பதன் மூலம் அவர் கடனைப் பெருக விடக் கூடாது. அவர் உண்மையிலேயே நேர்மையான காரியம் செய்வார் என்பது யாருக்குத் தெரியும்? மேற்கொண்டு பணம் கோரும் எண்ணத்தையோ, கடன் வாங்கும் உணர்ச்சியையோ தடை செய்வதுதான் அவருடைய பிராயச்சித்தத்தின் முதல் வேலை" என்றார்.

இதைக் கேட்டதும் உண்மையில் ஆன்ட்ரூஸிற்கு கோபம் வந்துவிட்டது. 'தொலைவில் உள்ள ஊருக்கு அவரை நடந்து போகச் சொல்லுவது அறிவற்ற செய்கை' என பாபுவிடம் அவர் கூறினார். ஆனால் காந்திஜியோ

பிடிவாதமாக இருந்தார். ஆஸ்ரமத்தில் உணவு உண்டு, இரவு ஓய்வு பெற்று, பிறகு இளைஞர் புறப்பட வேண்டியதாயிற்று.

காந்திஜியின் இறுதி மொழிகளாவன: "வீடு செல்; நேர்மையானதைச் செய்; பின்னர் எனக்கு எழுது; கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார்; சீக்கிரம் உனது செய்தியை எதிர் பார்ப்பேன்."

ஆனால், தீனபந்து ஆன்ட்ரூஸோ குறிப்பிடத்தக்க ஒரு காரியத்தைச் செய்தார். சபர்மதி ரயில் நிலையம் ஆஸ்ரமத்திலிருந்து ஒரு மைல். அங்கு இளைஞருடன் தாமும் போவதாகக் கூறிச் சென்றார். போனதும் தன் பையிலிருந்து ரூ 35 ஐ எடுத்து இளைஞன் கையில் கொடுத்து, வழியனுப்பிவிட்டுத் திரும்பினார். இப்பணத்தை ஏற்கெனவே ஒரு நண்பரிடம் இருந்து பெற்றிருந்தார். திரும்பியதும் நேரே பாபுவிடம் சென்று புன்முறுவலுடன் "பாபு, நான் செய்த குற்றத்திற்கு மன்னிப்பு வேண்டும்" என்றார்.

காந்திஜி சிரித்துக்கொண்டே வெடுக்கென இடைமறித்து "ஆமாம் எனக்குத் தெரியுமே! நீங்கள் அவ்விளைஞனிடம் பணம் கொடுத்திருப்பீர்கள்! இல்லையா? உங்களைத் **திருத்தவே முடியாது**" என்றார்.

தெரியாமற் செய்த தீங்கற்ற குற்றத்தைக் கண்டுபிடித்தால் பள்ளி மாணாக்கன் எவ்வாறு இருப்பானோ அதே போலாகி, காந்திஜியுடன் மனப்பூர்வமாகச் சிரிப்பில் கலந்து கொண்டார் ஆன்ட்ரூஸ்.

2. காந்திஜியும் குருட்டுப் பெண்ணும்

பூரணமான சில மேனாட்டுப் பழக்க வழக்கங்களைக் காந்திஜி நடைமுறையில் அனுஷ்டிப்பதுண்டு. சீமையில் மாணாக்கராகவும் தென்னாப்பிரிக்காவில் வக்கீலாகவும், பொது ஜன ஊழியராகவும் இருந்த காலங்களில் பல் வகையான ஐரோப்பியர்களுடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. துக்கப் படுவோரிடம் காந்திஜி ஆழ்ந்த அனுதாபம் காட்டக் கூடியவராயினும், அவ்வித எண்ணம் இல்லாமல் இருப்பவர் போல நடந்துகொள் வார்.

ஒரு சமயம் சபர்மதி ஆஸ்ரமத்திற்குத் தமிழ்நாட்டிலிருந்து நடுத்தர வயதுடைய, கண் தெரியாத பெண் ஒருத்தி வந்திருந்தாள். கட்டியிருந்த செம்மஞ்சள் சேலையைத் தவிர அவளிடம் வேறு எதுவும் இல்லை; எவருக்குமே தெரியாதபடி ஒரு நாள், பிற்பகல் அவள் ஆஸ்ரமத்திற்குள் நுழைந்திருக்கிறாள். அவள் அமைதியாக நெசவுக் கொட்டகையின் தாழ்வாரத்தில் உட்கார்ந்தது தெரிந்த பின்னரே, ஆஸ்ரம வாசிகள் அவள் வந்திருந்ததை அறிந்தனர். ஆஸ்ரம எல்லைக்குள் பிச்சைக்காரர்களைக் கண்டிப்பாக நுழைய விடுவதில்லை. அவளுக்கு அங்கு என்ன வேலை எனக் கேட்டனர். அவள் அமைதியாக "நான் குருடி என்பது உங்களுக்குத் தெரியவில்லையா?" எனக் கேட்டாள்.

ஆஸ்ரம விதிகளைக் கடுமையாக அனுசரிக்கும் நிர்வாகியான மகன்லால் காந்தியிடம் விஷ்

யத்தைத் தெரிவித்தார்கள் ஆஸ்ரமவாசிகள். அவர், அவளிடம்போய் "சோதரி, உனக்கு எந்த உதவியும் நாங்கள் செய்வதற்கில்லை. நீ இங்கிருந்து போய்விடுவது நல்லது" என்று கூறினர்.

அவ்வளவுதான்! இதைக் கேட்டதும், அந்தத் தமிழ்ப்பெண், தார்த்தாரியப் பெண்ணைப்போல, முரட்டுத்தனமாக நடந்துகொள்ள ஆரம்பித்தாள்.

"வெளியே போகவா? என்ன இது! இது மகாத்மாஜியின் ஆஸ்ரமமா? அல்லது போலீஸ் ஸ்டேஷனா? நான் பட்டினியுடன் வந்திருக்கிறேன். எனக்குச் சோறு வேண்டும். தங்கவும் இடம் இல்லை. ஆகவே இங்கேயே தங்கப் போகிறேன். நீங்களெல்லாம் யார்? காந்திஜி எங்கே?" என்று அடுக்கடுக்காக அவள் கேள்விகள் கேட்க ஆரம்பித்தாள்.

தன் வாழ்க்கையில் இதுவரை யாரும் தன்னை இவ்வாறு தாக்கிப்பேசியதை அறியாதவர் மகன்லால். அவர் தயாள குணம் படைத்தவர். ஆகையால், அவளுடன் அவர் நியாயம் பேசிப் பார்த்தார். "காந்திஜி கடுமையான வேலையில் ஈடுபட்டுள்ளார்; ஆஸ்ரமத்தில் பிச்சைக்காரர்களைப் போஷிப்பது வழக்கம் இல்லை; இங்குள்ள ஒவ்வொருவரும் தனது உணவிற்காகத் தினசரி எட்டு மணிநேரம் பாடுபட்டு உழைக்கிறார்கள். நீ கண் தெரியாதவளாய் இருப்பதால், உனக்கு ஏற்ற இடம் குருடர்கள் விடுதியே! அண்மையில் உள்ள நகரத்தில் குருடர்களைப் போஷிக்கும் விடுதி ஒன்று இருக்கிறது. அங்கு உன்னை அனுப்பி வைக்கிறோம். என்றெல்லாம் அவர் கூறிப்

பார்த்தார். அதுவரை அவள் எதுவும் கூற வில்லை. பிறகு அவள் ஆரம்பித்தாள். "காந்தி ஜிக்கு வேலை அதிகம் இருக்கலாம்; ஆனல், எனக்கு எவ்வித வேலையுமே கிடையாது; ஆகவே, நான் காத்திருக்கிறேன். குருடானதால் என்னல் வேலை எதுவும் செய்ய முடியாது. வேறு இடங்களுக்குச் செல்லும் உத்தேசமும் எனக்கு இல்லை" என்ருள். மகன்லால் தனது தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. பின்னர், அவர் இதைக் காந்திஜி யிடம் கூறினர். காந்திஜி அவளுடன் சிறிது நேரம் பேசியபின், "அவள் இன்றிரவு இங்கு தங்கட்டும்; உணவளித்து உறங்க இடமளி யுங்கள்; காலையில் அவளைக் குறித்து யோசிக் கலாம்," என்ருர்.

மறுநாட் காலை;காந்திஜி அவளிடம், "நூற் பதற்குக் கற்றுக்கொடுக்கிருேம்; குருடாயினும் அழகாக நூற்கலாம்; உனக்கு அவகாசம் அளிக்கிறேன். அதன் பிறகு நீ சர்க்காவினல் எவ்வளவு நூற்றுச் சம்பாதிக்கிருயோ, அந்த அளவு உனக்கு உண்டி-உடை முதலியன தருகிருேம். இந்த நிபந்தனைக்கு உடன்பட்டால் இங்கே நீ தங்கலாம். உன்னை நாங்கள் கவனித் துக்கொள்கிருேம்" என்ருர்.

அவள் சஞ்சலமுற்று அதிருப்திகொண் டாள். ஆயினும் நூற்கக் கற்றுக் கொடுக்கப் பட்டது. மூன்றே நாளில் அக்கலையை அவள் வேகமாகக் கற்றுக்கொண்டு விட்டாள். ஆனல் அதற்குமேல் நூற்க மறுத்தாள். ஆஸ்ரமத் தைப் பற்றிய விஷயங்களைக் கிண்டத் தொடங் கினள்; நிம்மதியற்றிருந்தாள். எவ்வித ஆக் ஞைக்கும் பணிய மறுத்தாள்; அரைகுறை

ஹிந்துஸ்தானியிலும், தனது தாய்மொழியிலும் திட்டினாள். அவளை அமைதிப்படுத்தக் காந்திஜி இரண்டு, மூன்று முறை முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றார். இருப்பினும் நிலைமை வரவர மோசமாயிற்று. எந்த வேலையையும் செய்வதில்லை என உறுதிகொண்டு, மிகப் பயங்கரமான முறையில் அவள் சண்டைபோட ஆரம்பித்தாள். அதன்பின் பத்தாவது நாளன்று காந்திஜி அவளுக்கு இறுதியாக எச்சரிக்கை செய்தார். அவளை அழைத்து அமைதியோடு ஆனால், உறுதியான தொனியில்: "நாளைக் காலை இங்கிருந்து நீ புறப்பட்டு விடவேண்டும். நகரிலுள்ள குருடர்கள் விடுதியின் தலைவருக்கு ஒரு கடிதம் தருகிறேன். அங்கு நீ போக வேண்டும். விரும்பினால் உனக்குத் துணையாக ஒரு ஊழியரை உடன் அனுப்புகிறேன்," எனக் கூறினார்.

இவ்வாறு காந்திஜி கூறியதைக் கேட்டதும் அவள் பொறுமை இழந்தாள். வெறிபிடித்தவள் போலக் கதறி, "நீங்கள் உண்மையிலேயே மகாத்மாதானா? மகாத்மா வென்று யார் உம்மைக் கூறினர்கள்? ஒரு ஏழைக் குருடியை வெளியே துரத்துகிறீர்கள்? இது நியாயமா?" என அவர்மீது அவள் சீறி விழுந்தாள்.

இந்தச் சொல் அம்பு காந்திஜியைக் கிஞ்சிற்றும் அசைக்கவே இல்லை. மறுநாட் காலைப் பிரார்த்தனைக்குப் பின் ஆஸ்ரமத்தை விட்டு அவளை வெளியேறச் சொன்னார். அவளுக்குத் துணையாக மற்றொரு தமிழரான, அவருடையசுருக்கெழுத்தாளரை அனுப்பினார். ஆனால், அவளோ சுருக்கெழுத்தாளரைக் கண்டிப்பாக மறுத்து, அவருடன் எரிந்து

விழுந்தாள். தன்னேடு கூட வரவோ, தன் கையைப் பிடித்து அழைத்துப்போகவோ அவள் இடங் கொடுக்க வில்லை. எனவே, காந்திஜி கலக்கமின்றி, "நிரம்பச் சரி நானே அவளை அழைத்துச் செல்கிறேன்." அவள் கையைப் பிடித்து வாசற்பக்கம் வந்து "அவளை நானே அழைத்துப் போகிறேன் என்பதை அவளிடம் கூறுங்கள்" என்ருர்.

இதைக் கேட்டதும் அவள் சிறிது அமைதி அடைந்தாள். வெடுக்கெனச் சென்று அவள் கையைப் பற்றிக்கொண்டு காந்திஜி வாசற்படிக்குச் சென்ருர். தோல்வியுற்று, பணிவுடன் அவள் அவரைப் பின்பற்றிஞள்.

வாசற்படி வந்ததும், காந்திஜி அவளிடம் நிதானமாக, "விடுதியில் நல்லவளாக நடந்து கொள்;உன் நலனைப் பெரிதும் கவனிப்பார்கள்; ஆண்டவன் உன்னைக் காப்பாராக!" எனக் கூறி விடையளித்தார். தமிழ் நண்பர் கூடப் போனுர். விசித்திரமான கதையுடன் அவர் திரும்பினுர். சற்றுத் தூரம் சென்றதும், அவரிடம் அவள் திரும்பி, 'காந்திஜியின் கடிதம் தனக்குத் தேவையில்லை என்றும், தனக்கு யாருடைய உதவியுமே வேண்டிய தில்லை என்றும், அவர் திரும்பிப் போகலாம்' என்றும் கூறிவிட்டு வேகமாக அவள் நடந்து போனுளாம். ஆகவே, அவள் குருடி அல்ல என்பதும், பாசாங்குக்காரி என்பதும், ஒழுக்க மற்றவள் என்பதும் பின்னரே தெரிய வந்தது.

3 மகாத்மாவும் மூடபக்தியும்

காந்திஜி மிகுந்த சமயப் பற்றுள்ளவர். அதே சமயத்தில், அவர் சிறந்த பகுத்தறிவு வாதியும் ஆவார் என்பதிலும் சந்தேகம் இல்லை. நம்பிக்கையையும், பகுத்தறிவையும் தனக்கே உரிய முறையில் பொருத்திப் பார்ப்பவர் காந்திஜி. அவர் ஒருவரால்தான் பொருந்தாத இரண்டு முரண்பட்ட குணங்களைப் பொருத்திப் பார்க்க இயலும். ஏனெனில் பகுத்தறிவுக்கும் நம்பிக்கைக்கும் உரிய ஆற்றலும், வரம்பும் ஒன்று போலவே உள்ளன என்பதை அவர் நன்கு அறிந்திருக்கிறார். தமது அனுபவத்தினாலும் இந்த உண்மையை அவர் பூரணமாகக் கிரகித்திருக்கிறார். பிரார்த்தனையின்போது காந்திஜி, ராமாயண, மகாபாரதக் கதைகளைக் கேட்கும் தன்மையை நீங்கள் கவனித்தால், ‘சமய மூடப் பழக்க வழக்கங்களில் அவர் பெரிதும் தோய்ந்திருக்கிறார், அவரை மாற்றவே இயலாது’ என்ற தவறான முடிவிற்கே வருவீர்கள். ஆனால், அவரைப் போல மூடப் பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட்ட வேறு பகுத்தறிவுவாதிகளை நீங்கள் காண்பதரிது. தன்னை வைத்தே சில மூடபக்திகள் வளர்வதை அவர் தடுக்க விரும்புகிறார். தெரிந்தோர் இதை உண்மை என்பர். அவ்வாறாயின் இவருடைய பகுத்தறிவு எத்தகையது என்பது தெற்றெனெ விளங்குகிறதல்லவா? ஏனென்றால், சிலர் - பகுத்தறிவுவாதிகள் என்று தம்மைக் கூறிக்கொள்வோர் - தங்களைப் பற்றிய மூடப் பழக்கங்களை

விரும்பி வளரவிட்டு, பொதுவாக வெளியே பரவிக் கிடக்கும் மூடப் பழக்கங்களை ஒழிக்க முற்படுகிறார்கள். அவர்கள் விரும்பாத மூடப் பழக்கங்களை ஒழிப்பதென்னவோ உண்மையே! ஆனால், தங்களுக்குச் சாதகமான புதிய மூடப் பழக்கங்களை உற்பத்தி செய்கிறார்கள் அல்லவா? தற்கால அரசியல் பகுத்தறிவுவாதிகளிடம் காணப்படும் சர்வ சாதாரணமான உண்மையாகும் இது. ஆனால், காந்திஜியை இத்தகையோருடன் சேர்ப்பதற்கில்லை.

1924-ம் வருடம் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகக் காந்திஜி டெல்லியில் 21-நாள் உண்ணாவிரதம் இருந்தார். அப்போது பிரசித்தமான இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. 'தில்குஷ்' மாளிகையில் காந்திஜி படுத்திருந்தார். அவ்வறைக்குச் செல்லும் படிக்கட்டுகளின் முன்னர் காலஞ்சென்ற ஆன்ட்ரூஸ் வாயிற்காப்போனாக இருந்தார். சாந்த சொரூபி; ஆனால், கடமையில் ஒருசிறிதும் இரக்கமே காட்டமாட்டார். காந்திஜி நாளுக்கு நாள் பலஹீனம் அடைந்து வருவதால், அவர் பரிபூரண ஓய்வுபெறவேண்டுமென டாக்டர்கள் கூறினார்கள். ஒரு தினம் அவருடைய உயிரே ஊசலாடிக்கொண்டிருந்தது. உண்ணாவிரதத்தின் 13-வது நாள் என்றெண்ணுகிறேன்; தொலை தூரத்திலுள்ள ஒரு கிராமத்திலிருந்து ஒரு ஆடவனும், பெண்ணும் உபவாசமிருக்கும் மகாத்மாவின் தரிசனத்திற்காக அங்கு வந்தார்கள். வெளிக்கதவுகளை முற்றுகையிட்ட பல்லாயிரக்கணக்கான மக்களுடன் இவ்விருவரும் சேர்ந்துகொண்டனர். ஆனால், ஒழுங்கான முறையிலே விடாமுயற்சி செய்து இரு

வரும் தொண்டர்களின் அணியை உடைத்து விட்டார்கள். ஆனால், படிக்கட்டினடியில் உட்கார்ந்திருந்த ஆன்ட்ரூஸோ அவர்களை வழி மறித்தார்.

"நீங்கள் ஏன் இவ்வாறு தள்ளிக்கொண்டு வருகிறீர்கள்? காந்திஜி பலவீனமாக இருப்பதால் அவருக்குப் பரிபூரண ஓய்வு வேண்டும். மேலே போய் இடையூறு செய்யக்கூடாது. ஆகையால், அவர் வாழ வேண்டும் என்று பிரார்த்தனை செய்துவிட்டு வீடு திரும்புங்கள்" என்றார்.

ஆனால், விவசாயத் தம்பதிகளோ இருந்த இடத்தை விட்டு ஒரு அங்குலம்கூட நகர மறுத்தனர். நடந்து வந்த அலுப்புத் தோன்றிற்று. அம் மாது பளபளப்பான ஒரு குடத்தின் வாயை இலைகளால் மூடி வைத்திருந்தாள். அவர்களுடைய கதை விசித்திரமானதாயும் உணர்ச்சியூட்டத்தக்கதாயும் இருந்தது. அவர்களுடைய ஒரே பையன் தொலைவிலுள்ள அவர்கள் குடிசையில் மிகவும் நோயுற்றுப் படுத்திருந்தான். கிராம வைத்தியர்கள் கைவரிசை எல்லாம் காட்டியும் நோய் குணமாகாமல் நாளுக்கு நாள் அதிகமாகியது. எனவே, அவர்களுக்கு ஒரு யோசனை தோன்றியது: அதாவது, 'கிணற்றிலிருந்து ஒரு குடம் தண்ணீர் மொண்டு, அதனால் மகாத்மாவின் பாதங்களைக் கழுவுவது; அவ்வாறு கழுவிய நீரைத் திரும்பக் குடத்திலே ஊற்றி, அதைப் பவித்ரமான மருந்தாகக் கொண்டு, தங்கள் பையனைக் குடிக்கச் செய்வது.' இந்த நம்பிக்கையின் காரணமாக, பிரகாசமான கண்களைச் சுழட்டியும், உணர்ச்சிப் பெருக்கெடுத்த வார்த்தைகளைக் கொட்டியும்

ஆன்ட்ரூஸிடம் ஒரு நிமிஷமாவது காந்திஜியைப் பார்க்க வேண்டுமென வாதித்தனர் அந்தத் தம்பதிகள். அவரோ டாக்டர்களின் வார்த்தையை மதித்துக் கண்டிப்பாக நடந்துகொண்டார். இரு தரப்பிலும் எவ்வித உடன்பாடும் ஏற்படுவதாயில்லை. இருவரும் 'காந்திஜியைப் பார்க்காவிடில் நகரவே மாட்டோம்' எனக் கூறிப் படியினடியில் சப்பணம் போட்டு உட்கார்ந்துவிட்டனர். பின்னர், காந்திஜிக்கு இதை விளக்க வேண்டுமென்றும், அவர் "தான் பலவீனமாக இருப்பதால், யாரும் பார்க்க வரவேண்டாம்" என்றும் கூறிவிட்டால் தட்சணமே அவ்விருவரும் போய்விட வேண்டும் என்றும், ஒரு நண்பர் யோசனை கூற, நிலைமை சமாளிக்கப்பட்டது.

நோயாளியான பையனைப்பற்றி முழு விபரமும் கூறவேண்டும் எனச் சொல்லி தம்பதிகள் இதற்கு ஒப்புக்கொண்டனர். "அதைப் பற்றி நான் கவனித்துக்கொள்கிறேன்" எனக் கூறிக்கொண்டே ஆன்ட்ரூஸ் மேலே சென்றார்.

நோயாளிக்கு மருந்தாகக் கொள்ளக் கூடிய வகையில் தம் பாதத்தைக் கழுவும் அசட்டுத்தனத்தைக் காந்திஜியா ஒப்புக்கொள்வார்? இதை நிச்சயம் மறுத்துவிடுவார்! என்று உறுதிகொண்டார் ஆன்ட்ரூஸ். கதை முழுவதையும் கேட்ட காந்திஜி மிகப் பலவீனம் உற்றிருப்பினும் அவர்களைத் தம்மிடம் அனுப்பும்படியும், அவர்களைத் தான் காண விரும்புவதாயும், அவர்களுடைய மூட பக்தியைச் சரிப்படுத்துவதாயும் மெதுவான குரலில் கூறினர்.

முடிவில் அவர்கள் இருவரும் மேலே வந்து, காந்திஜியைத் தரிசித்தனர். காந்திஜி மெதுவாக, சுத்தமான குரலில் அவர்களுக்கு ஏதோ கூறித் தம் உள்ளத்தை ஓரளவு திறந்து காண்பித்தார்! "கடவுளிடம் அவர்களுக்கு நம்பிக்கை உண்டா? அப்படியானால் தங்கள் நம்பிக்கையைக் கேவலம் ஒரு மனிதனிடம் செலுத்துவதனால் கடவுளை நிந்திப்பதாகத் தோன்றவில்லையா? மேலும், தம் பாதங்களைக் கழுவி, அழுக்குப்படிந்த அத்தண்ணீரை மருந்தாக உபயோகிப்பதால், அவ்வாறு செய்யும் உங்களுக்கும் அதை அனுமதிக்கும் எனக்கும் அவமானமில்லையா? சுகாதாரத்தைப் பற்றிய மிகச் சாதாரணமான விஷயத்தைக் கூட அவர்கள் அறியாதது ஏன்?" என்றெல்லாம் காந்திஜி அவர்களுடன் கால்மணி நேரம் விவாதித்தார். இதைக் கேட்ட அவர்கள் நாணத்தால் தலை குனிந்தனர். தண்ணீர்க் குடத்தைக் காலியாக்கினர். 'கடவுளை நம்புங்கள்; பையனை டாக்டரிடம் காண்பியுங்கள்' எனக் காந்திஜி இறுதியாகக் கூறினர். திருப்தியுடனும், மகிழ்ச்சியுடனும் அவர்கள் வீடு திரும்பினர். ஏன்? தாங்கள் கோரி வந்ததைவிட அதிகமாகவே அவர்கள் பெற்றனர்-என்றுமே மறக்க முடியாத ஓர் அரிய விஷயத்தை அவர்கள் அறிந்து கொண்டார்கள் அல்லவா? மதக் கோட்பாடுகளையும், வைத்திய முறையையும் இணைக்க அவர்களுக்கு இனி ஒருபோதும் மனம் வராது; கீழ்த்தரமான மாந்திரீகத்தைக் கடவுளுடன் பொருத்திக் கடவுளை நிந்திக்க அவர்களுடைய மனம் இடம் தராது. ஆன்ட்ரூஸ் அவர்களை அன்புடன் நோக்கி, கிண்டல் செய்யலானர். தாங்கள் ஏதோ நிறைய தெரிந்துகொண்டதாக எண்ணி, அவர்

களும் திரும்பிக் கேலி செய்தனர். வெளியே வந்ததும்கூட்டம் அவர்களைச் சூழ்ந்துகொண்டு அவர்களுக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தைப் பற்றிக் கேட்கலாயிற்று. காந்திஜியின் கூற்று பகிரங்கப் படுத்தப்பட்டது. இவ்வாறு காந்திஜி தூவிய பகுத்தறிவு விதை மூடிவே யில்லாமல் காதோடு காதாகச் சென்று வெளிப்பட்டுப் பெரிய மரத்தைப் போல வளருவதை யார் அறியக்கூடும்!

4. காந்திஜியும் குற்றமற்ற பொய்யும்

பொய் பேசுபவர்களைக் கண்டால் காந்திஜிக்குப் பிடிக்கவே பிடிக்காது. 'அயோக்கியனை அனுமதிப்போம்; ஆனால், முட்டாள்களை அனுமதிக்கவே மாட்டோம்' என அறிவாளிகள் கூறுகிறார்கள். ஆனால், காந்திஜியோ சில சமயங்களில் முட்டாள்களைக்கூட ஏற்றுக் கொள்வார்; பொய்யர்களை அருகில்கூட அண்ட விடவே மாட்டார். அவருடைய ஆஸ்ரமத்திலே நேர்மையை அனுசரிக்கும் முறை மிக ஒழுங்காக வகுக்கப்பட்டிருந்தது. சிறு குழந்தைகூட நேர்மையைக் கடைப்பிடித்து ஒழுகி வந்தது எனலாம்.

1926-ல் எற்பட்ட ஒரு நிகழ்ச்சி. கலாசாலைப் படிப்பை முடித்துவிட்டு, அப்போது தான் வெளிவந்த வாலிபன் ஒருவன் ஆஸ்ரமத்தில் தங்குவதற்கு வந்தான். ஆஸ்ரமத்தில் சேர வந்தால் முதற்படிப்பு தோட்டி வேலை. ஆகவே, வழக்கம் போலக், காந்திஜி அவனை மூன்று மாதம் வரை தோட்டி வேலை செய்யும்படி கட்டளையிட்டார். குழந்தைகளிடம் அவன் அதிகப் பிரியமாக நடந்துகொள்வான்.

எனவே, குழந்தைகளின் அன்னியோன்னிய நண்பன் ஆனன். ஒருநாள் 8 வயதுள்ள ஒரு பெண்ணுடன் வேடிக்கை காட்டி விளையாடிக் கொண்டிருந்தான். ஒரு எலுமிச்சம் பழத்தை அவள் தலைக்குமேலே தூக்கிப் பிடிக்க, அதை அவள் தாவித் தாவிப் பிடிக்க முயன்ருள். இந்தக் காட்சி அவள் நடனமாடுவதைப் போன்று இருந்ததாயினும், அவளால் அந்தப் பழத்தை வாலிபனிடமிருந்து கைப்பற்ற முடியவில்லை. இது சந்தோஷ மூட்டுவதாய் இருப்பினும், முயற்சி தோல்வியடையவே, அவள் வருந்திக் களைப்புற்று அழ ஆரம்பித்தாள். இப்போது நிலைமையை எவ்வாறு சமாளிப்பது? பழம் நோயாளிக்காக உள்ளது. எனவே, சபர்மதி நதியில் பழத்தை எறிவதாகப் பாசாங்கு செய்து வாலிபன் அதைத் தன் பையினுட் திணித்துக்கொண்டான். உடனே குழந்தை மகிழ்ச்சியடைந்தது. 'நதியில் எறிந்த பழம் இப்போது என்னவாகும்?' எனக் கேட்டாள். 'நதி பழத்தை விழுங்கிவிட்டது. இனி அதை ஆழமான இடத்தில்தான் தேடவேண்டுமென்று' இளைஞன் கூறிப் பேச்சை மாற்றினன்.

அடுத்த நிமிஷமே இருவரும் மீண்டும் நண்பர்களாயினர். நோயாளியின் அறைப் பக்கம் சென்றனர். வழியில், அவன் தன் கைக்குட்டையைப் பையிலிருந்து எடுத்தான்; உடனே பழம் தவறித்தரையில் விழுந்து புரண்டது. உடனே அதை எடுத்தாளா? இல்லை. ஆனல், வெறுப்பு அடைந்தவளாய் ஆச்சரியமான முறையில் நின்றபடியே அவனை உற்று நோக்கினள்.

'ஆகவே, நீ என்னிடம் பொய் கூறினாய்! பழத்தைப் பையில் சொருகிக்கொண்டு நதியில் எறிந்து விட்டதாகப் பொய் கூறினாய். ரொம்ப சரி; நீ ஒரு பொய்யன் என்பதைப் பாபு விடம் கூறுகிறேன்' எனக்கூறி மாயமாய் மறைந்து விட்டாள்.

காந்திஜி நதியைப் பார்த்துக்கொண்டே ஏதோ வேலையிலீடுபட்டிருந்தார். அவள் நேரே அவரிடம் சென்று கதையை **அவிழ்த்து விட்டாள்.** இதுபற்றி கவனிப்பதாகக் காந்திஜி கூறினார்.

மாலைப் பிரார்த்தனைக்குப்பின் காந்திஜி அவனிடம் விசாரித்தார். காந்திஜியைத் திருப்திப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு பூராக் கதையையும் விவரித்து, வெறும் வேடிக்கைக்காக நடந்ததே என்பதைக் கூறினான். காந்திஜியும் இதை ஏற்றுக்கொண்டார். ஆனால், அவர் புன்முறுவலுடன் "இளைஞனே! உன்னை எச்சரிகிறேன். விளையாட்டாகக் கூடக் குழந்தைகளிடம் பொய் கூறவே கூடாது. முதலில் விளையாட்டாக ஆரம்பிப்பவை பிற் காலத்தில் குழந்தைகளுக்குச் சாதாரணப் பழக்கத்தில் வந்து விடும். ஒருமுறை அவர்கள் பொய்யைச் சாதாரணமாகக் கொண்டுவிட்டார்களானால் பிறகு அது மிக அபாயத்தில் கொண்டுவிடும்" எனக் கூறினார்.

விஷயம் இத்துடன் முடியவில்லை. இதர கல்லூரி விற்பன்னர்களைப் போலவே இவனும் தர்க்கிக்கலானான். மற்ற ஆஸ்ரமவாசிகளுடன் தான் விளையாட்டாகக் கூறிய பொய்களைப் பற்றி எல்லாம் அங்கு விவாதித்தான். இவ் விவாதம் காரசாரமாக இருந்தது. "குற்றமற்ற பொய்களை அறவே ஒழிக்க வேண்டுமானால்

ராமாயண, மகாபாரதக் கதைகளையும், மோகினிக் கதைகளையும் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கலாகாதே" எனக் கேட்டனர் சிலர். இவ்விவாதத்தால் சலிப்புற்ற காகா கலேல்கர் தமக்கே உரிய முறையில் இதை ஒரு முடிவுக்குக் கொணர்ந்தார்:

"தினசரி வாழ்க்கையில் ஊசலாடும் பொய்களையும் புராண இதிகாசங்களையும் பிணைக்காதீர்கள். கல்லூரிப் பட்டதாரிகள் வீணை பேச்சை ஒழித்துச் சிந்தனையில் கவனத்தைச் செலுத்த முற்படுவார்களானல் குழந்தைகளிடம் எவ்விஷயத்திலும் உண்மையே பேசிப் பழக வேண்டுமென்பதை அறிவார்கள்" என்றார்.

5. காந்திஜியும் காப்பிப் பிரியரும்

நோயுற்றோர்க்குச் சிறந்த முறையில் காந்திஜி நர்ஸ் வேலை செய்வார். இவ்வேலையை அவர் எங்கே கற்றுக்கொண்டார் என்பது விசித்திரமே! பள்ளியில் படித்துத் தேறவில்லை என்பது நிச்சயம். ஆனல் தம் வாழ்க்கைப் பணிக்கு இவ்வேலை மிக அத்தியாவசியம் என உணர்ந்தார். தமது கஷ்டமான வாழ்க்கை அனுபவங்களின் மூலம் இதையும் கற்றுக் கொண்டார். ஆஸ்ரமத்தின் நோயாளிகள் அனைவரும் அவர் மேற்பார்வையிலும், பராமரிப்பிலுமே இருந்து வந்தனர். டாக்டர்களின் ஆலோசனை இருந்தாலும் நோயாளிகளைக் கவனிப்பது காந்திஜிதான். ஆஸ்ரமத்தில் உள்ளவர்கள் அனைவரும், அதிலும் குறிப்பாக இளைஞர்கள், வேடிக்கை ஒன்று செய்வதுண்டு. அதாவது, யாராவது காந்திஜியைப் பார்க்கவும்,

பேசவும், அவர் செய்யும் தமாஷை அனுபவிக்கவும் விரும்பினால் நோய் என்பதாகப் படுக்கையில் கிடக்க வேண்டியதுதான்! நிச்சயம் பலன் கிட்டும்! ஏன்? நாள் தவறாமல் காந்திஜி நோயாளிகளிடம் செல்லுவார்; ஒவ்வொரு படுக்கையருகிலும் இருந்துகொண்டு விளையாட்டாகப்பேசிச் சிலநிமிஷங்கள் அங்குப் பொழுது போக்குவார்; வேண்டியவைகளையும் நேரே கவனிப்பார்; எவ்வளவு முக்கிய வேலை இருப்பினும் இவ்வேலையைக் கவனிக்காவிட்டால் அவருக்குப் பொழுது போகாதது போலத் தோன்றும்.

ஒரு சமயம் ஒரு வாலிபனுக்கு வயிற்று உளைச்சல்; உடல் நலம் சீர் கெட்டுக் கொண்டு இருந்தது. ஆஸ்ரமத்தின் கடுமையான உணவு முறையை இயன்றளவு கடைப்பிடிக்க முயன்றான்; காப்பிப் பழக்கம் வேரூன்றி இருந்ததால் சிரமப்பட்டான்; ஆஸ்ரமத்திலோ காப்பிக்குத் தடை. என் செய்யலாம்? நற்காலமாக வயிற்றுளைவு ஒருவாறு நீங்கி, குணமடைந்துகொண் டிருந்தான். வழக்கம் போல் காந்திஜி சுற்றிக்கொண்டு அவனிடம் ஐந்து நிமிஷம் வந்து போவார். அந்த நேரம் அவனுக்கு ‘டானிக்’ சாப்பிட்டது போல் இருக்கும்.

வியாதி குணப்பட்டுக்கொண் டிருந்த காலத்தில் ஒரு கப் காப்பிக்காக அவன் ஏக்கங் கொண்டான். தென்னிந்தியாவின் உயர்ந்த பானமாகிய காப்பியைப் பற்றி ஒரு நாள் கனவு கண்டுகொண் டிருந்தான். அச்சமயம் கால் கட்டையின் ‘கிளிக்’ சத்தம் கேட்டது. தான் விரும்பி வரவேற்கும் சத்தமல்லவா அது? மறு நிமிஷம் எப்போதுமுள்ள

புன்னகை தவழும் முகத்துடனும், உற்சாகம் ஊட்டும் சொற்களுடனும் காந்திஜி பிரசன்ன மானார்.

"உன் உடம்பு இப்போது பெரும்பாலும் தேவலை. வழக்கமான உணவை இனி நீ உட் கொள்ளலாம். என்ன சாப்பிட விரும்புகிறாய்? நயமான உப்புமாவா? தோசையா? எது வேண்டும்?" எனக் கேட்டார் காந்திஜி.

தென்னிந்தியரின் உணவு வகையில் இவ் விரண்டும் மிகப் பழமையானவை. அவனுக்கு இவை இரண்டும் மிகப் பிரியமானவை என்பது காந்திஜிக்குத் தெரியும். அவனுக்குச் சட்டென ஒன்று தோன்றிற்று. திடீரென அவன் "ஒரு கப் காப்பி கிடைக்குமா?" எனக் கேட்டான்.

காந்திஜி பெருத்த சிரிப்புடன் "அட பாவி! உனக்கு அதுவா வேண்டும்?" என்றார். அவன் முகத்தில் தோன்றிய கவலைக்குறியைக் கண் ணுற்றதும், "உனக்கு நிச்சயமாகக் காப்பி கிடைக்கும்; உன் நோயை லேசான காப்பி தணிக்கும்; காப்பியுடன் வேறென்ன வேண் டும்? உப்புமா, தோசை இவை செய்யமுடியாது; ஆனால், 'டோஸ்ட்' செய்த ரொட்டி காப்பி யோடு சாப்பிட ருசியாக இருக்கும். எல்லாம் ஒரு தட்டில் அனுப்புகிறேன்" என்றார்.

இனிய வார்த்தைகளைக் கூறியபின் காந்திஜி அறையைவிட்டு அகன்றார். - சபர்மதி ஆஸ்ரமத்திலா காப்பி! அதுவும் காந்திஜியே வலியவந்து அனுப்புவதா!! தன் அதிர்ஷ் டத்தை அவனால் நம்பவே முடியவில்லை. இருந் தாலும் காத்திருந்தான். ஆம்! காந்திஜி வயதானவராச்சே! நம்மை ஏமாற்றியா

விடுவார்? என வாலிபன் நம்பிக்கொண் டிருந்தான்.

ஆஸ்ரமத்தின் மற்ருேர் மூலையில் ரஸ்தா வின் மறுபுறம் காந்திஜியின் குடிசை இருந்தது. என்ன நடக்கிற தென்பதை வாலிபன் கற்பனை செய்கின்ருன். "அடுக் களைக்குச் சென்று கஸ்தூரி பாவிடம் காந்திஜி ரொட்டி, காப்பி கேட்பார். இல்லை, அகாலமாகி விட்டதால் அடுக்களை மூடி இருக்கும். அன்னையும் ஓய்வு பெறும் நேரம். இந்நிலையில் காந்திஜிக்கு மிகுந்த சிரமத் தைக் கொடுத்துவிட்டேனே? இருபது நிமிஷ மாகிவிட்டது. ஹா! என்ன சத்தமிது? க்ளிக்! என்ன? காந்திஜியின் கட்டைச் சத்த மல்லவா? அவர் ஏன் திரும்புகிருர்? நேரமான தால் காப்பி இல்லையோ? நெஞ்சு வெடித்து விடும் போலிருக்கிறதே." இவ்வாறெல்லாம் அவன் எண்ணமிட்டுக்கொண்டே இருந்தான். ஆனல், காந்திஜி வெள்ளைக் கதர் மூடிய தட்டு டன் வந்ததைப் பார்த்தவுடன் அவன் அப்படியே திகைத்துவிட்டான். உண்மையில் என்னதான் நடந்தது!

'இதோ காப்பி, ரொட்டி உனக்காக நானே தயாரித்தேன். ஒரு சிறந்த தென்னிந் தியன் தயாரிப்பதைப் போல காப்பி இருக் கிறதா என்பதைப் பார்த்து எனக்கு நற்சாட் சிப் பத்திரம் அளிப்பாயா?" என்ருர்.

"வேறு யாரையாவது இதை எனக்குக் கொண்டுவரச் சொல்லக் கூடாதா? உங்க ளுக்கு ஏற்பட்ட சிரமத்தைப் பார்க்க வருத்த மடைகிறேன்" என்று மெதுவாகக் கூறினன் இளைஞன்.

"இதோ பார்! காப்பியைக் கெடுத்து விடாதே; ஆறிப்போனால் ருசிக்காது; 'பா' ஓய்வு பெறுவதால் தொந்தரை செய்யவில்லை. சரி, நான் போகிறேன். தட்டை யாராவது எடுத்துப் போவார்கள்" எனக் கூறி வேகமாய்ப் போய்விட்டார்.

காப்பி இளசாக இருந்தது. ஆனால் வெகு பிரமாதம். அமிர்தம் போல் அதை அவன் உறுஞ்சிக் குடித்தான். ஆயினும் மனம் வேதனைப்பட்டது.

"அகால நேரத்தில் யாருக்கும் தொந்தரவு கொடுக்கக் கூடாதெனக் காந்திஜி எண்ணு கிறார்; சமையலறையைத் திறக்கிறார். அடுப் பைப் பற்றவைக்கிறார்; காப்பி தயாரிக்கிறார்; ரொட்டி சுடுகிறார்; அவற்றைத் தட்டில் வைக் கிறார்; தூக்கிக்கொண்டும் வருகிறார்." - இவை அப்படியே மனக்கண்முன் தோன்றின. அதிலே மூழ்கி அவன் பெருமிதங்கொண்டான்.

எப்போதும் அன்னை கஸ்தூரிபாவின் சமையலறையில் காப்பியும், தேயிலையும் விருந் தினர்கட்காக இருக்கும். முக்கியமாக, தேயிலை ஆன்ட்ரூஸிற்கும், காப்பி ராஜாஜிக்குமே.

6. அன்னையும் அண்ணலும்

காந்திஜி கடினசித்தம் உடையவர் என் பது யாவரும் அறிந்ததே. எனினும் அவர் அன்புடையவர்; ஆனால், வசப்படுத்த முடியா தவர். யாரொருவர் ஈவிரக்கமின்றிக் கட்டுப் பாட்டை அனுசரிக்கிறாரோ, அவரே காந்தி ஜிக்கு மிக்க அந்நியோந்நியமானவர். எனவே தான், காந்திஜி தம்மளவில்கூடக் கடுமையாக



அன்னையும் அண்ணலும்

நடந்து கொள்கிறார். அவரிடம் சகிப்புத் தன்மை உண்டு. எதிர்ப்புச் சக்தியை அவர் வெறுப்பதில்லை; உண்மையிலேயே அதை அவர் வளர்க்கிறார். தம்மைத் தாமே நம்புவதை விட ஜனங்கள் காந்திஜியை அதிகம் நம்பு வதால் அவரை யாரும் எதிர்ப்பதே இல்லை. இதற்கு விலக்காக ஆஸ்ரமத்தில் ஒரே ஒரு நபர் மட்டும் உண்டு. அவருக்கு மிக நெருங்கிய தொடர்புடையவரான அவர் மனைவியே அந்த நபர். ஆஸ்ரமத்தில் அவரை 'பா' — தாய் — என்றே அழைப்பார்கள். மிகத் துடுக்கான சுபாவம் உடையவர்; பிரகாசமான கண்கள்; கண்டிப்பான குரல்; உறுதியான உதடுகள்; ஆக்ஞை இடத்தக்க வயது முதிர்ச்சி; விரும்பினால் இனியவளாக நடந்து கொள்வாள்; இல்லையேல் இரக்கமற்றவளாக வும், பணிவற்றவளாகவும்கூட நடந்து கொள் வாள். அங்கு சமையல்பிறை முதலியவற்றைக் கண்டிப்பான முறையில் இந்த அம்மையாரே மேற்பார்த்து வந்தார். ஆனால், பாவம்! அவளோ சிரமமான வேலைகளைச் செய்து வந்தாள். கணவன், பேரக்குழந்தைகள், இருபது ஆஸ்ரமவாசிகள் ஆகிய அனைவருக் கும் அவள் சமையல் செய்து பரிமாற வேண் டும். இருபது பேர்களும் அவளுக்குச் சுமை. மொத்தம் இருநூறு பேர்களில், ஒருபகுதியே இவர்கள். மற்றவர்கள் ஆஸ்ரமத்தின் இதர விடுதிகளில் இருக்கிறார்கள். உதவிக்குப் பலர் இருந்தாலும், சமையல் செய்தல், இன்னும் இதர முக்கிய வேலைகளை அன்னை கஸ்தூரி பாவே மேற்பார்த்து வந்தார். எனினும் அவ ளுடைய ஊக்கமோ, உற்சாகமோ ஒருபொழு தும் குறைந்ததே கிடையாது. அவளுக்கு உதவி புரிவது எளிதன்று. அதிகாரப் போக்குடைய

எஜமானியைப் போன்று நடந்து கொள்வாள்; காலந்தவறுமல், களைப்பின்றி ஒழுங்காக வேலை செய்வாள். தன் அரிய உதாரணத்தைத் துணையாளரும் பின்பற்றச் செய்வாள். அவர்கள் சிறிதேனும் சோம்பலாகவும், கவனக் குறைவாகவும் இருந்து விட்டாலோ அவ்வளவுதான்! தொலைந்தார்கள். ஒருசமயம் திருவாங்கூர் வாலிபர் ஒருவர் அம்மைக்கு உதவியாளராக இருந்தார். அவருக்கு வேலை கடினமாகத் தோன்றியது. இருப்பினும், வேலையில் முன்னேறினர்; அன்னைக்குத் திருப்தியாக இருந்தது. அமைதியாக நாட்கள் சென்றன. சமையல் விடுதிகளில் எப்போதும் காந்திஜி மறைமுகமாகக் கவனம் செலுத்து வது வழக்கம். வாலிபனைப் பற்றி அவர் பல முறை சிலாகித்திருக்கிறார். இந்திய அரசியலை அறிந்திருந்தளவு சமையல் விடுதி அரசியலை யும் அறிந்திருந்தார்.

காந்திஜிக்கும் கஸ்தூரி பாவுக்கும் மோதல் ஏற்படும் விஷயம் ஒன்றுண்டு. அப் போது, காந்திஜி சற்று பலவீனம் அடைந் திருப்பவர் போலத் தோன்றும். நியாயம் என்னவோ பாவின் சார்பில்தான் இருக்கும். இந்தியாவின் அரசியல் தலைநகரமான அந்த ஆஸ்ரமத்திற்கு எதிர்பாராத நிலையில் அடிக் கடி பல விருந்தினர்கள் வருவார்கள். பல விடுதிகளிலும் இவர்கள் தங்குவர். ஆயினும், அதிகமான விருந்தினர்கள் பாவின் விடுதி யில்தான் தங்குவார்கள். முன்னறிவிப்பின்றி இம்மாதிரியாக விருந்தினர்கள் திடீரென வரும் போது அவளுக்குக் கோபம் ஏற்படும்; ஆனல் அதை வெளிக்காட்டிக் கொள்ளமாட்டாள். இவ்வேளைகளில் காந்திஜி பணிவாகவும், தங்

திரமாகவும் நடந்துகொள்வார்; 'பா'வுக்குச் சற்றுப் பயப்படுவார். ஒருசமயம் அன்னையும், துணையாளரும் உணவுக்குப்பின் வேலைகளை முடித்துக் கொண்டு அடுக்களையை மூடினர்; 'பா' மிகக்களைப்புற்றிருந்தார். இது இயற்கைதானே? மேலும் உடல் நலமும் சிறிது கோளாருக இருந்தது. எனவே, களைப்புத் தீர அறையில் சிறிது நித்திரை புரிந்தார். காந்திஜி வேகமாக அடுக்களையை அடைந்து, வெளிக் கிளம்பத் தயாராக இருந்த வாலிபனிடம் ரகசியமாக அடுக்களையிலுள்ள 'பா'வைத் தொந்தரவு செய்யாதபடி ஒரு மணி நேரத்தில் வரவிருக்கும் மோதிலால்நேரு உட்பட்ட பல முக்கிய விருந்தினர்கட்கு உணவு தயாரிக்கும்படி கூறினர்.

பாவின் அறையைப் பார்த்ததும், அவர் உதட்டில் விரலை வைத்து, 'உஸ்! அவளைத் தொந்தரவு செய்யாதீர்கள்; குஸுமைக் கூப்பிடு; அடுப்பைப் பற்றவை; காய்கறியை நறுக்கு; சப்பாத்திக்கு மாவைப் பிசை; அவசியத் தேவை ஏற்பட்டாலன்றி 'பா'வைக் கூப்பிடவேண்டாம். ஜாக்கிரதை! அவளுக்குக் கோபமுண்டாகச் செய்யாதே. இதில் 'பா' என்னைக் குறித்து வருந்தும்படி நடக்காமல் இருந்தால் உனக்கு வெகுமதி தருகிறேன்' என்ருர்.

அவர் பேச்சில் குற்றமற்ற சூழ்ச்சிக்காரரின் தொனிப்பு இருந்தது. ஒருவேளை 'பா' திடீரென எழுந்து தம்மை எரிந்து விழுவாளோ என்ற பயமும் சிறிது இருந்தது.

வாலிபனும், குஸுமும், சத்தம் போடாமல் அடுக்களையைத் திறந்தனர். அடுப்பை மூட்டிக்

கறிகளை நறுக்கி, மாவைப் பிசைந்தனர். பிறகு துரதிர்ஷ்டவசமாக ஒரு பித்தளைப் பாத்திரம் தடுமாறித் தரையில் விழுந்த சத்தத்தைக் கேட்டு 'பா' எழுந்து விட்டாள். ஆஸ்ரமப் பூனைகள் அடுக்களையில் ஏதோ விஷமம் செய்வதாக எண்ணிச் சட்டென உட்புகுந்தாள். பார்த்தாள். நடந்த காட்சி பிரமிப்பைக் கொடுத்தது. 'நடப்பவை என்ன?' எனக் கடுமையான குரலில் கேட்டாள். அவர்கள் மெதுவாக விபரம் கூறினர்.

"எனக்கேன் தெரிவிக்கவில்லை? அதிகப் படியான வேலையைக் கவனிக்கமாட்டேன் என்ற எண்ணமா?" என வினவினாள்.

'இல்லை அம்மா; எல்லாவற்றையும் தயார் செய்ததும் தங்களை எழுப்பலாம் என்றிருந்தோம்" என வாலிபன் வினயத்துடன் பதில் சொன்னான்.

'பா'வுக்கு ஆங்கிலம் நன்றாய்ப் பேச வராது; வாலிபனுக்குக் குஜராத்தி தெரியாது. புன்னகையுடன் 'பா' அரைகுறையான ஆங்கிலத்தில் "நீயும் மிகக் களைப்படைந்திருக்கிறாய். எனினும், நீ அதிகமாக வேலை செய்யலாம், நான் செய்ய முடியாதென்று ஏன் நினைக்கிறாய்?" எனக் கேட்டாள். அதன்பின் நிலைமை சரியாகி விட்டது.

யாரும் நினைப்பதைக் காட்டிலும் 'பா' மிக்க சாதுர்யமானவள். இவை யாவும் காந்திஜி ஏற்பாடு என்பதை அறிந்துகொண்டாள். இரவில் பிரார்த்தனைக்குப் பிறகு, விருந்தினர் அனைவரும் சென்றபின், திடீரெனக் காந்திஜியைத் தாக்கலானாள். இடுப்பிலே விரல்களை ஊன்றிக் கொண்டு விஷமம் நிறைந்த பார்வை

யுடன் அவர் முன் நின்று கொண்டு, "நானின்றி அவர்களை ஏன் வேலை செய்யச் சொன்னீர்கள்? நான் ஒரு சோம்பேறி என்பதாக உங்கள் அபிப்பிராயமா என்ன? என்று சற்றுக் கோபத்துடன் கேட்டாள்.

"இம்மாதிரி சமயங்களில் உனக்கு நான் பயமில்லையா?" எனக் காந்திஜி சாதுர்யமாகப் பதிலிறுத்தார்.

'என்ன? எனக்குப் பயமா?' எனக் கூறுவதே போல 'பா' கட கடவெனச் சிரித்து விட்டாள். அதில் நம்பிக்கை யின்மை தொனித்தது. இருந்த போதிலும் அதுதான் உண்மை. ஒருவேளை காந்திஜி யாருக்குமே பயப்படாதிருக்கலாம். ஆனல், அவர் யாருக் காவது பயப்படுகிருர் என்ருல், அது அவர் மனைவியான, வசீகரிக்க முடியாத கஸ்தூரி 'பா' ஒருவருக்குத்தான் என்பதென்னவோ உண்மை.

7. காந்திஜியும் காலந்தவருமையும்

குறிப்பிட்ட காலத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பொருட்டு காந்திஜி ஓர் பிரமாண்டமான கூட்டத்தை ஏமாற்றிவிட்டு அப்படியே நழுவி விட்டார். இந்த நிகழ்ச்சி சிதம்பரத்தில் நடந்தது. சுருக்கமாகக் கூறுவதானல், கூட்டத்தினர் காந்திஜி மீது வெறுப் புற்றுத் திட்டலாயினர். அவரைக் கண்டதும் அமைதியின்றி, மின்சாரசக்திபோல் வேகமாக அவர் மீது சாடினர். மூர்க்கமான இந்தக் கூட் டத்தாரிடமிருந்து காந்திஜி தப்பிப் பிழைத்தது தம்பிரான் புண்ணியமாயிற்று. அவரைப்

பார்த்து மரியாதை செய்ய விரும்பிய செயல்கள் அவரைக் கொல்பவையாக இருந்தன.

பெரும்பாலும், அன்றைய தினம் சிதம்பரத்தில் சுபதினமே அல்ல. அண்ணுமலை சர்வ கலாசாலைப் பக்கமாக அச்சங்கத்தில் பேசுவதற்குப் போனுர். அருகில் டாக்டர் ராஜன் இருந்தார். கலாசாலைக்கு அரை மைல் முன்பு உள்ள ஒரு குறுகிய தெருவில் காந்திஜியின் காரைப் பார்த்தவுடனே ஒரு பிரமாண்டமான கூட்டம் கூடி விட்டது. வேறு இரு கார்கள் கூட வந்த போதிலும், எப்படியோ காந்திஜியின் காரைக் கூட்டம் நிறுத்தி விட்டது. காந்திஜி விஷயத்தைக் கேட்டார். கூட்டத்தில் இருந்த ஒருவர் முன் வந்து, அவரும் நண்பர்களுமாகக் கூப்பிடு தூரத்தில் போடப்பட்டுள்ள பந்தலில் உயர் ஜாதிப் பிராமணர்களும் ஹரிஜனங்களும் சேர்ந்து சமபந்தி போஜனம் செய்ய ஏற்பாடு செய்திருப்பதாகவும், அவருடைய சிதம்பர விஜயத்தைக் கௌரவிப்பதற்காகவே இந்த ஏற்பாடு என்றும், க்ஷணநேரமாவது காந்திஜி வந்து இந்த விருந்தில் கலந்து கொண்டு விருந்தினர்களை மகிழ்விக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்; விஷயத்தை விளக்கமாக எடுத்துரைத்தார். காந்திஜி ராஜனிடம் 'சர்வகலாசாலைக்குப் போக வேண்டிய நேரத்தை'க் கேட்டார். அவர் பத்தே நிமிஷம் இருப்பதாகக் கூறினுர். 'இவ் வைபவம் நிகழ்ச்சியிலிருக்கிறதா' வென மறுபடியும் கேட்டார். 'இல்லை' என்று பதில் வந்தது. 'பத்து நிமிஷத்தில் தாம் வேறொரு குறிப்பிட்ட நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டியிருப்பதால், இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாதென்றும், நிகழ்ச்சி நிரலில்

இல்லாதபடியால் தம்மைத் தடுத்து நிறுத்துவது நியாயமில்லை என்றும் கூட்டத்தினருக்கு விளக்கமாகக் கூறும்படி' காந்திஜி ராஜனிடம் சொன்னுர். ஆனல் கூட்டமோ எதையுமே லட்சியம் செய்வதாக இல்லை. ஒரு நிமிஷமாவது காந்திஜி இரங்கித்தான் ஆகவேண்டுமென்று பிடிவாதம் செய்தது. ராஜன் கூட்டத்தினரோடு ரொம்ப நாசூக்காகத் தர்க்கிக்கலானுர். காந்திஜியோ கூட்டத்தினரின் சுபாவத்தை அறிந்துகொண்டு, காரின் மற்றேர் கதவு வழியாக மெதுவாக நழுவிக் கலாசாலையை நோக்கி வெகு வேகமாக நடந்தார். நடப்பதென்ன வென்பதே ஒரு கண நேரம் யாருக்கும் புரியவில்லை. உண்மையான குற்றவாளி டாக்டர் ராஜனே என்பதாக அவர்கள் எண்ணி அவருடன் சண்டை போடத் தொடங்கினர். இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு கூட்டத்தை விட்டு ஒருவாறு எப்படியோ விலகிவந்து பின்னுள்ள கார் ஒன்றில் வேகமாக ஏறிக் கொண்டார். காரும் கலாசாலையை நோக்கிப் பறந்தது. காந்திஜி தப்பித்துக் கொண்டு சென்றதை அறிந்ததும் கூட்டத்தினர் வழக்கம் போல் பேரிரைச்சலுடன் 'மகாத்மா காந்திக்கு ஜே' எனக் கோஷித்தனர். எவ்விதத் தடங்கலுமின்றி கார் முன்னேறியது. உற்சாகமுள்ள மாணவன் கடுமையான பரீட்சையிலிருந்து தப்பியதே போல் காந்திஜி பின்பக்கம் திரும்பி உற்சாகமாகக் கைகளை ஆட்டினுர். கூட்டத்திலிருந்த ராஜனுடைய நிலையோ பரிதாபம்! அஹிம்சைக் கண்ணுடன் நோக்கிஞல் அது திருந்தக்கூடியதாக இல்லை; மக்களின் உக்கிரமான கோபம் வெளிப்பட்டது. மூர்க்கர்களிடம் இருந்து

தப்பிக்க ராஜன் முஷ்டி யுத்தம் செய்ய வேண்டியதாயிற்று. இவற்றைக் கண்ட காந்திஜி என் செய்வார்? ஹிம்சை அஹிம்சையைப் பற்றிய நியாய அநியாயங்களை ஆராய அது சமயமில்லை. அவர் கார் சென்ற வேகம் புழுதி மண்டலத்தையே கிளப்பிவிட்டது. கூட்டத்திற்கு ஒரு நிமிஷம்தான் தாமதம். தாமதத்திற்கு மன்னிப்புக் கோரியதுதான் அவரின் முதல் வார்த்தை.

காந்திஜிக்கு அவருடைய கடிகாரம் பிரிக்க முடியாத தோழன் போன்றது. அவருடைய ஒப்பற்ற நற்குணங்களிலே முதலாவதாக இருப்பது '**காலந் தவருமையே !**'

8. மகாத்மாவும் முதலாளித்துவமும்

ஆச்சரியப்படத்தக்க பலவகை மனிதர்களின் விருந்தினராக காந்திஜி இருந்து பழகியுள்ளார். பன்முறை இந்த அரை நிர்வாணப் பக்கிரி, ராஜாக்கள், ஜமீன்தார்கள், கோடீஸ்வரர்கள் ஆகியோரின் விருந்தினராக இருந்திருக்கிருர். டெல்லி ஹரிஜன காலனியில் இருப்பதுபோல, மிகச் சாதாரண ஊழியர்களிடையேயும், எளிய மக்களிடையேயும் வாழும் படியான அரிய சந்தர்ப்பம் மிக அபூர்வமாகவே கிடைக்கும். எங்கு தங்கினலும் காந்திஜிக்கு சிறிதும் குழப்பமோ, சஞ்சலமோ இருப்பதில்லை. எங்காவது வரவேற்பு ஆடம்பரமாகவோ, படாடோபமாகவோ இருப்பின் அதை ஒதுக்கி விடுவார். ஆச்சரியம் என்னவென்ருல், இம்மாதிரி வரவேற்புகளை அளிப்பவர்கட்குக்கூடத் தெரியாதவகையில், அதை அவர் ஒதுக்கித் தள்ளுவதே! அவருடைய

பணிவு நிறைந்த, சிறந்த ஹாஸ்யமும், வசீகர சக்தியுமே அவர் அதை மறைப்பதற்கான ரகசியச் சக்தியாக விளங்குகிறது. ஒரு முறை, வங்காள யாத்திரையின்போது, அவர் ஒரு பெரிய ஜமீன்தாரின் விருந்தினராக இருக்க நேரிட்டது. பெரிய மாளிகை; எஜமானின் பலவகையான கண்டிப்பு நிறைந்த கட்டளைக் குப் பணிந்து இங்குமங்குமாக ஓடிக்கொண்டிருந்த ஏராளமான ஏவலாட்கள்; இத்யாதி வைபவங்கள்.

மேலே தளத்தில் மாலைப் பிரார்த்தனை நடந்தது. காந்திஜியின் தரிசனத்திற்காக மக்கள் பிரார்த்தனைக்கு ஏராளமாகக் கூடினர். அவருடைய பவித்திரமான முகத்தைத் தரிசிக்கவே, மக்கள் பிரார்த்தனையை ஒரு சந்தர்ப்பமாகக் கருதி மறைமுகமாகக் கூடுகிறார்கள். அன்றுமாலை, ஆண்களும், பெண்களுமாக மாடியின் ஒவ்வொரு மூலை, முடுக்கிலும் ஏராளமாகக் கூடி, நெருக்கிக்கொண் டிருந்தனர். அனைவரும் அமர்ந்தபின், காந்திஜி, ஜமீந்தாருடன் வந்து பின்சுவரின் அருகில் உட்கார்ந்தார். பிரார்த்தனைக்கு முன் விளக்குகளை அணைத்து விடுவது அவர் வழக்கம். எனவே, மெதுவாக, "விளக்கை அணையுங்கள்" என்றார்.

ஜமீன்தார் தலைக்கு மேல்பக்கம் ஸ்விட்ச் இருந்தது. அவரோ மந்தமாக உட்கார்ந்திருந்தார். மகாத்மாவின் கட்டளையை அவரா நிறைவேற்றுவார்?. ஒரு போதும் மாட்டார்! வழக்கம்போல வேலைக்காரர்களை ஜமீன்தார் கூவி அழைத்தார். பின் என்ன நிகழ்ந்தது? எல்லோரும் பிரமிக்கும்படியான ஒரு சம்பவம்! ஒரே விநாடியில் காந்திஜி எழுந்து விளக்கை

அணைத்து விட்டு, மீண்டும் உட்கார்ந்து பிரார்த்தனையை ஆரம்பித்தார். ஜமீன்தார் நடப்பதைஅறியுமுன் எல்லாம் முடிந்து விட்டது. இதைப் பலரும் உற்றுக் கவனிக்கலாயினர்.

பிரார்த்தனை முடியும் கட்டம். இவ்வேளையில் எப்போதும் போல மக்கள் காந்திஜியிடம் காங்கிரஸ் சம்பந்தமான கேள்விகளைக் கேட்கலாயினர். சிலர் நூல் நூற்பதைப்பற்றிக் கேட்டனர். அதற்குக் காந்திஜி 'படித்த பணக்கார வகுப்பைச் சேர்ந்தோர் பலர் எவ்வித உடலுழைப்பையும் வெறுக்கின்றனர்' என நீண்ட நேரம் விவரித்துக் கூறினார். 'தன் உழைப்பினாலன்றிக் கிடைப்பதை உண்பவன் திருடன்' என்று கீதை கூறுவதை விவரித்தார். மற்றும் பல கேள்விகளுக்குப் பதில் கூறினார். பின்னர் அதிசயமான ஒரு சம்பவம் நிகழ்ந்தது. கூட்டம் கலைந்து போகும்பொழுது யாரோ ஒருவர் அங்கிருந்த மேஜையைத் தள்ளி விட்டார். அதிலிருந்த கண்ணாடிப் பாத்திரம் விழுந்து உடைந்து சிதறியது. பயில்வான்போன்று ஜமீன்தார் குதித்தெழுந்து உடைந்த சில்லுகளைப் பொறுக்கலானார். தம் ஆக்ஞைக்குப் பணியப் பல ஏவலாட்கள் அங்கிருப்பதைத் திடீரென அவர் மறந்து விட்டார் போலும்! இருவர் ஓடினர்; ஆனால், இக் கோலத்தைக் கண்டதும் திகைத்து நின்று விட்டனர். மதிப்பிற்குரிய விருந்தாளி, சொல்லாமல்சொல்லிய கண்ணியமான வார்த்தைகளை அவர் அப்படியே எடுத்துக்கொண்டு நடைமுறையில் காண்பித்து விட்டார். இவ்வற்புதத்தைக் கவனியாமல் காந்திஜி கீழே இறங்கி

விட்டார். ஆனல், அவருடைய உதாரணமும், உழைப்பின் தகுதியைப் பற்றி அவர் கூறியவைகளும் வீடு தவருமல் சென்றது.

9. காந்திஜி ஓய்வு பெறும் முறை

காந்திஜியின் தமிழ்நாடு சுற்றுப் பிரயாணத்தில் இக்கதை நிகழ்ந்தது. பஞ்சாபுக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில்தான் ஜனத்திரள் மிக அதிகமாகத் தனக்காகக் கூடுகிறதெனக் காந்திஜி கூறுவதுண்டு. தமிழ் நாட்டினர் அவரை வழிபடுகின்ருர்கள். ரயில் விருதுநகரை நோக்கி வருகிறது; ஜனத்திரள் முற்றுகையிட்ட ஸ்டேஷன் தெரிந்தது. மூன்ரும் வகுப்புப் பெட்டியில் சிறு தூக்கத்திலிருந்த காந்திஜி எழுந்து தன் துணியை இறுக்கிக் கட்டிக்கொண்டு குதித்து எழுந்து நின்ருர். பொதுக் கூட்டங்களுக்காக அடிக்கடி அவர் இம்மாதிரிச் சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டியிருந்ததால் பத்துப் பதினைந்து நிமிஷம் சிறு தூக்கம் மேற்கொள்வதை மிக அபூர்வமாகப் பழகி இருந்தார்.

அவர் கட்டியிருந்த துணி கிழிந்திருப்பதை ஒருவர் சுட்டிக் காட்டி "ஸ்டேஷனுக்கே வந்துவிட்டோம். உடைமாற்றுவதற்கு ஒரு நிமிஷ சாவகாசம் கூட இருக்காதே!" என்ருர். "ஏன் மாற்ற வேண்டும்." எனக் கேட்டுக் கொண்டே காந்திஜி ஸ்நான அறைக்குச் சென்று மறுவிநாடியே வெளியே திரும்பினர். வேஷ்டியிலிருந்த கிழிசலைக் காணும்; ஏன்? துணியை மறுபக்கமாக மாற்றிக் கொண்டார்! துரிதமாகத் தன் கண்ணுடி, கடிகாரம் முதலியவைகளை எடுத்துக் கொண்டு

இறங்கத் தயாரானர்; ரயிலும் பிளாட்பாரத்தில் நின்றது. இறங்குமுன் தன்னிடம் கூறியவரிடம் திரும்பி புன்கையுடன் "லண்டனில் மாணவனுக இருந்தபோது தனக்குத் தலைமயிர் சீர் செய்ய மட்டுமே பத்து நிமிஷம் செல்லும். ஆனல், இப்போதோ என் சகல அலங்காரத்துக்குமே அரை நிமிஷந்தான் தேவைப்படுகிறது" என்ருர்.

இப்பிரயாண காலத்தில் தான் துரிதமாகச் செல்லும் மோட்டார்களிலே 10, 15 நிமிஷத் தூக்கம் போடும் கலையிலே காந்திஜி தேர்ச்சி பெற்ருர். சென்னையிலுள்ள ஒரு மோட்டார் கம்பெனி அவருக்கென அளித்த 'மாஸ்டர்பியூக்' காரிலே பிரயாணம் செய்தார். உட்காரு மிடத்தில் தூங்குவதற்கு வசதியாக ஒரு சிறு படுக்கை போடப்பட்டிருந்தது. ஹரிஜன முன்னேற்றத்திற்காகத் தினசரி 5, 6 பொதுக் கூட்டங்களில் பேசுவார். ஒன்றிலிருந்து மற்ருென்றிற்குப் போகும் பொழுது காந்திஜி தன் பிரயாண கர்த்தாவான டாக்டர் ராஜனிடம் "என்ன ராஜன்! அடுத்ததென்ன? தூக்கத்திற்குப் பத்து நிமிஷமா, பதினைந்து நிமிஷமா?" எனக்கேட்டார். ராஜன் பரிகாசம் பொருந்திய கண்களுடன், இல்லை பாபு! அடுத்தது ரொம்பத் தூரம். முப்பது நிமிஷம்கூட தாராளமாகத் தூங்கலாம்!" என்பார்.

"என்ன? அவ்வளவு சுகவாழ்வா!" எனக்கூறிவிட்டு மறுவிநாடியே ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்து விடுவார். காரோ மைலுக்கு மைல் வேகம் அதிகரிக்க, மெஷின் பேரிரைச்சலுடன் செல்லும். அடுத்து நிற்குமிடத்தில் கார்வந்து நிற்க வேண்டியதுதான்; காந்திஜி

எழுந்து சோர்வே இன்றி கூட்டத்தின் மேடையில் தயாராகத் தோன்றுவார். இது தான் ஒரு பெரிய அற்புதம்! குதிரையில் சவாரி செய்யும்போதே நெப்போலியன் தூங்குவதாகக் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால், இந்தியாவின் அஹிம்சா வீரனை இந்த நெப்போலியனை பறந்து செல்லும் கார்களில் தூங்குவது மட்டுமல்ல; பெருங் கூட்டங்களின் இடைக் காலங்களில் உறங்குவதோடு அடுத்த கூட்டத்தின் சரியான சமயத்திற்கு விழித்தும் விடுகிறார். பிரசித்தமான இச்சிறு தூக்கங்களால் அவர் ஓய்வு பெறுகிறார் எனக் கூறுவது தவறு; ஆனால், பலரும் கூறுவதே போல கட்டை கிடப்பதுபோன்ற ஆழ்ந்த நித்திரையில் இருக்கிறார் என்றே குறிப்பிடலாம்.

10. காந்திஜியும் பயமுறுத்தலும்

தனது அன்றாட வாழ்க்கையிலேயே சில உண்மைகளைக் கடைப்பிடித்து, அவற்றை தன்னைச் சூழ்ந்திருக்கும் மற்றவர்களும் அறியும்படி காந்திஜி செய்து விடுகிறார். அவர் பொதுவாக அரிய பெரிய கருத்துகளை விரிவாக வெளியிடுவதில்லை. சில குறிக் கோள்களைத் தவிர, அவருடைய எண்ணங்கள் பெரும்பாலும் அப்போதைய நிகழ்ச்சிகளையும் நிலைமைகளையுமே பொறுத்து வெளிப்படும். கற்பனைகளாய் இருப்பினும்கூட, அவற்றையும் அவர் அன்றாட வாழ்க்கையாகிய தமது உரை கல்லிலே உரைத்துப் பரீட்சித்துப் பார்ப்பது வழக்கம். பரீட்சையில் சரிவரா விட்டால் அதை மீண்டும் ஆராய்ந்து, தன் பகுத்தறிவுக்கொத்ததாக இருந்தால், தன்

மனத்தை அதற்கான வழியிலே சரளமாக மாற்றிக் கொள்வார். கற்பனையும், அனுபவமும் சேர்ந்து ஒன்றுபட்டுச் செல்வதையே விரும்புகிறார். அவை ஒரு (நாணயத்தின்) பணத்தின் இரு புறங்களாகும்.

பொதுவாக, தற்கொலை ஒரு பயங்கரமான பாவமாகக் கருதப்படுகிறது; அது உண்மைதானே! மனிதனுடைய உயிர் விலை மதிக்க முடியாத பொருளன்றோ? ஒருவனுக்கு உயிர் தன் சொந்தச் சொத்தாக இருப்பினும், அதை ஒழித்துக் கட்ட அவனுக்கோ, வேறு யாருக்குமோ உரிமை கிடையாது. சில சந்தர்ப்பங்களில், தவிர்க்க முடியாத கடமையாகத் தற்கொலை ஏற்பட்டு விடுகிறதெனக் காந்திஜி கூறுகிறார். இதற்கு எடுத்துக் காட்டாக ஆஸ்ரமத்தில் நடந்த ஒரு சோக ஹாஸ்ய நாடகத்தைக் குறிப்பிடலாம்.

ஆசிரமவாசி ஒருவருக்கு ஒரு நாள் தான் ஒரு பெரிய பாபி என்பதாகத் திடீரெனத் தோன்றியது. இதனால் அவர் தன்னைத்தானே வருத்திக் கொள்ளலானார். இது சிறுகச் சிறுக மேலோங்கி அவரை வெப்ப நோய்க்கு ஆளாக்கியது. சாதாரணமாகவே அவர் அமைதியான பயந்த சுபாவமுடையவர்; இதனால் 'ஹிஸ்டிரியா' வியாதி உடையவன் போலானார். 'காந்திஜி ஆஸ்ரமத்தில் வசிப்பதற்குத் தன்னைப் போன்ற பாபிகளுக்கு இடமில்லை என்றும், ஆஸ்ரமத்தில் இருக்கவே தனக்குத் தகுதி இல்லை என்றும், ஏன்? உயிரோடு இருக்கவே தகுதியற்றவன்' என்றும் எண்ணினார். இந்த எண்ணம் அவரிடையே மேலோங்கி வளர்ந்தது. 'தற்கொலை தான் இதற்கு முடிவான தண்டனை! அதுதான் தன்

னைத் தண்டித்துக் கொள்ளும் முறையும் ஆகும்!' என்ற முடிவிற்கு அவர் வந்தார். சதா சண்டை போடும் இயல்புள்ள தன் மனைவிக்கு ஒரு பிரிவுக் கடிதம் எழுதி, அதை அவள் பார்க்கும் படியான ஓர் இடத்திலே வைத்து விட்டுப் படுக்கச் சென்றார். பரிதாபமான அப்பெண் அதை அன்றிரவே பார்க்க நேர்ந்தது. தன் கணவன் ஓர் பைத்தியம் என்பதை அவள் ஏற்கனவே அறிவாள். இருப்பினும், இந்தியப் பெண்மணிகளிடமுள்ள சிறப்பே போல், இவளும் இதை வெளிப்படுத்தாமல் தன்னுள்ளே அடக்கி வைத்திருந்தாள். ஆனால் இப்போதோ? உண்மையில் பயந்தாள்; காந்திஜியிடம் ஓடினாள்; விபரம் கூறினாள். உடனே காந்திஜியின் கட்டளைக் கிணங்க அவளுடைய கணவன் நடுக்கத்துடனும், பச்சாத்தாபமான பார்வையுடனும் தோன்றினார். தனது பரிதாபகரமான பார்வையுடன் 'பாப'க் கதையை விவரித்துத் தான் உலகில் வாழ யோக்கிதையற்ற ஓர் குற்றவாளி என்றார். அவருடைய பலவீனத்தையும் பயங்காளித்தனத்தையும் நன்கறிந்த காந்திஜி அவர் கூறியவை அனைத்தையும் பொறுமையுடன் கேட்டு. அவர் 'பாபி' என்பதை ஒப்புக் கொண்டார்.

"ஆனால், உன்னை நீயே கொல்வானேன்? உயிருடன் இருந்து பிராயச்சித்தம் செய்து கொள். உன்னைப் பரிசுத்தப் படுத்திக்கொண்டு சிறந்த மனிதனாக ஆகுவாயாக!"

"முடியாது! ஒருக்காலும் முடியாது!! என்னை நானே தண்டித்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். உங்களையும் மற்றும் பலரையும் ஏமாற்றி விட்டேன். எனக்கு வேறு எவ்வித நம்பிக்கையும் இல்லை. நான் மடியத்

தான் வேண்டும்" எனக் கதறினன் அந்தச் சண்டாளன்.

சம்பாஷணையில் ஓரிரு நண்பர்கள் கலந்து கொண்டனர். 'இவ்வறியாமையை ஒழித்துத் தற்கொலையைக் காந்திஜி நிறுத்த வேண்டு' மென்றார் ஒருவர். இதைக் கேட்ட அப் 'பாபி' ஆறாத் துயருற்றான்.

கொஞ்ச நேரம் காந்திஜி சிரித்தார்; பிறகு அவர் "ரொம்ப நல்லது; இப்போது போ; மீண்டும் சிந்தித்துப் பார்; உயிரைப் போக்கிக் கொள்ளக் கூடாதென நிச்சயமாகக் கூறு வேன். உன் எண்ணத்தை மாற்றிக் கொள்; உடனே பிராயச்சித்தமும் செய்து கொள்; இதுவே நான் உனக்குக் கூற விரும்பும் யோசனை. ஆனால் ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் நாளைக் காலை வந்து நீ இதையே வலியுறுத்து வாயானல், அதைப் பற்றி நான் புனரா லோசனை செய்கிறேன்" எனக் கூறினார் காந்திஜி.

"இல்லை நான் மடிய வேண்டும்; என்னைச் சாக அனுமதியுங்கள்" எனப் பரிதாபம்கலந்த குரலில் அவன் புலம்பினன்.

காந்திஜி உடனே அவனை நிறுத்தி, "சரி நீ போ; என்னை நீ நன்கறிவாய். உன்னைப் பற்றிய முடிவிற்கு வர உனக்குப் பூரண உரிமையுண்டு" என்றார். கூட்டம் கலைந்தது. அவன் கிளர்ச்சி மிகுந்தவனாகச் சென்றான்.

நடுக்கத்துடன் நின்றிருந்த அவன் மனைவி யின் பயத்தைக் காந்திஜி தணித்தார். "நீ கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. அவன் உயிரைப் போக்கிக் கொள்ளவே

மாட்டான். இன்றிரவு வீட்டில் எவ்வித சங்கடமுமின்றி அவன் அமைதியுடன் இருக்கும் பொருட்டு நீ இங்கேயே தூங்கு" எனக் கூறினர்.

இரவு கழிந்தது; மறுநாட் காலை; நம்பிக்கை இழந்த அம்மனிதன் காந்திஜியிடம் வந்தான்.

"ஓ! இன்னும் நீ எங்களோடு இருக்கிறயா? ரொம்ப நல்லது. வந்து உட்கார்" எனக் காந்திஜி சாந்தமான சிரிப்புடன் கூறினர். கடைசியில், தன் பாபத்தைப் போக்குவதற்கு காந்திஜி கூறிய கடுமையான வேலைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் இணங்கினன். இப்போது அதிலே அபிவிருத்தியடைந்து அவன் அற்புதமான காரியங்களைச் செய்து வருகிறன். பயந்தவனுதலாலே தன்னைத்தானே கொல்லத் துணிய மாட்டான் என்பதையும் காந்திஜி நன்கறிந்தார். ஆனல் அவனுடைய தற்கொலை எண்ணத்தைக் கூராக்கி அதை வளரச் செய்தார். உண்மையில் அவனுடைய பயந்த தன்மையை நன்கறிந்திருந்ததால் இவ்வபாயமான வழியைக் கடைப்பிடித்தார் காந்திஜி.

11. காந்திஜியும் பள்ளி ஆசிரியரும்

காந்திஜியை, ஓர் சிறந்த பள்ளி ஆசிரியர் எனலாம். இருந்தாலும் இவ்வேலைகளுக்கு அவருக்கு நேரமே கிடைப்பதில்லை.

சபர்மதி ஆஸ்மரத்தையொட்டி, ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. ஆஸ்ரம விதிகளை அனுசரித்து அங்கும் பிள்ளைகளுக்குப் பிரம்படி கொடுப்பதில்லை. வெறும் விளையாட்டிற்

குக்கூட, ஆசிரியர்கள் பிரம்பை வைத்துக் கொள்ளுவதில்லை. அஹிம்ஸா முறையில் அப் பள்ளி நடைபெற்று வருவதாக, அதற்கு ஒரு பெருமையுமிருந்தது. இது திருப்திகரமாகவும், பெருமை தரக்கூடியதாகவும், இருந்தபோதிலும் சில சமயங்களில் இதனல் தவறுகளும் ஏற்பட்டன. சாதாரணமாக துஷ்டர்களைத் தண்டிக்க வேண்டுமென்று ஆசிரியர்களுக்குத் தோன்றும். எப்படி யிருந்தாலும், பையன்கள் பையன்கள்தான்;பெண்கள்பெண்கள்தானே; இளமைக்குரிய விஷமம், விளையாட்டு, மட்டு மரியாதை யற்ற செயல்களைப் பையன்கள் துணிவுடன் செய்யத் தலைப்பட்டனர்; இதை எவ்விதம் தடுப்பது என்பது புலப்படவில்லை. வழக்கமான அஹிம்ஸா முறைகள் எல்லாம் உபயோகித்துத் தீர்ந்தன; ஆனல் விஷமம் தணிந்த பாடில்லை. ஆயினும், அஹிம்ஸை தோல்வியுற்றதென ஆசிரியர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. பிள்ளைகளின் விஷமம் உச்ச ஸ்தாயை அடைந்தது; ஆரவாரித்தனர், கொக் கரித்தனர். ஒருவருக்குமே என்ன செய்வதென்று புலப்படவில்லை. முடிவாக, சில ஆசிரியர்கள் காந்திஜிடம் சகலவற்றையும் கூறுவதென முடிவு செய்தனர். ஏனெனில் எப்போதும் முடிவான கஷ்டம் அவரிடமே சொல்லுவது; அது சாதாரணமானதாக இருந்தாலுங் கூட அவரிடமே சொல்லப்படும். ஆனல் இதுவோ உண்மையில் ஒரு அசாதாரணமான பிரச்னை. ஆகவே, காந்திஜியின் அறையில் ஆசிரியர்கள் கூட்டம் நடைபெற்றது; விஷயம் அலசி ஆராயப்பட்டது. இதன் முடிவு எவரும் ஆச்சரியப்படும்படி இருந்தது. 'செய்யக்கூடியது இரண்டே' எனக்காந்திஜி கூறினர். "ஒரு குறிப் பிட்ட சந்தர்ப்பத்தில் ஒரு ஆசிரியர் பையனின்

தவறைத் திருத்தத் தன்னால் இயன்ற அளவு அஹிம்ஸா முறையை உபயோகிக்க வேண்டும்; அது உபயோகமில்லாவிடில் ஹிம்ஸை முறை பலன் தருமென அவர் மனப்பூர்வமாக நம்புவாரானால் பிரம்பைக் கையாளவேண்டியது. தற்காலிகமாகவே அவர் இதை உபயோகிப்பதென்பதையும், முடிவில் இதனால் நன்மையை விடத் தீமையே அதிகமாகும் என்பதை அவர் ஒப்புக்கொண்டால், பிறகு அவர் அஹிம்சா (நைச்யமான) முறையிலேயே முடிந்த அளவு முயற்சிப்பதே கடமை என்பதையும் அறிய வேண்டும். இவ்வழிகளால், தோல்வி ஏற்பட்டால், அவர் ராஜினமாச் செய்துவிடவேண்டும்'' என்பதே முடிவு. இதைக் கேட்ட ஆசிரியர் ஒருவர் வெகுண்டெழுந்தார். 'ஒரு பையனிடம் அளவற்ற பொறுமையுடன், சாத்வீக வழியில் பலவித தந்திரங்களையும் உபயோகித்துப் பார்த்து விட்டதாகவும், அவற்றால் பிரயோஜனமேயில்லை என்றும், இதற்குத் தக்கவழி, பையனை அடித்துத் திருத்துவதேயாகும்'என்று கூறினர். இவரைக் காந்திஜி நன்கறிவார். அவர் இஷ்டப்படி நடக்குமாறு சொன்னர். இதைக்கண்ட சில லட்சியவாதிகள் திடுக்குற்றனர். 'என்ன! நம்பமுடியவில்லையே! அஹிம்ஸை மீது காந்திஜிக்கு இருந்த நம்பிக்கை போய் விட்டதா?' என அவர்கள் நினைக்கலாயினர். ஆயினும் குறிப்பிட்ட அவ்வாசிரியர் தான் எண்ணியபடி நடக்கலானர். விஷமிகளை நையப் புடைத்தார்; தன் போக்கில் நடந்து கொண்டார். சத்தியாக்கிரக ஆஸ்ரமத்திலே இது ஒரு பெரும் புரட்சியே! குறிப்பிட்ட பையன் ஆசிரியர் அபிப்பிராயப்படி சற்று முன்னேற்றமடைந்தான். காந்திஜி இதைப்பற்றி ஒன்றுமே கூறவில்லை. தன் மனத்துள்ளே வைத்

திருந்தார். சில வாரங்கள் சென்றன. அந்த ஆசிரியர் காந்திஜியிடம் திரும்பவும் வந்தார். 'பன்முறை பிரம்பை உபயோகித்து விட்டதாகவும், அப்போது அது தற்காலிக சாந்தியாகவே இருந்ததாகவும், போலித்தன்மை மறைந்து இப்போது பையன் முன்னைவிட மிகக் கடுமையானவனுக மாறி விட்டதாகவும், சமாளிப்பது கஷ்டமென்றும், கூறினர். ஆனல் பரீட்சை இன்னும் பூரணமாக முடியவில்லையே. மீண்டும் பழைய அஹிம்சா வழிதான். ஆசிரியர் எல்லையற்ற உற்சாகத்துடனும், முன்னைவிட அதிகமான அக்கரையுடனும், கவலையுடனும், சாத்வீக வழியை மேற்கொண்டார். பையனிடம் மிகுந்த சிரத்தை காட்டினர். பிரம்பைத் தொடவே இல்லை. அன்பு வழியினல் பையன் அற்புதமாகத் திருந்தினன், துரிதமாகவும் முன்னேறினன். 'பின்னர் செலுத்திய அன்பு வழியைக் காட்டிலும், முன்னர் கொடுத்த பிரம்படியால்த் தான் பையன் உண்மையில் திருந்தினன்'' என்று சில உதவாக்கரை ஆசாமிகள் சம்பிரதாயமாகக் கூறினர். அஹிம்சையே உருவமாகவும், அவ்வழியைத் தன்னைக் காட்டிலும் வேறொருவர் பூரணமாக அறிந்திராத, அதில் நிகரற்றவருமான மகாத்மா காந்திஜியே இதன் உண்மையை நன்கு அறிவார்.

12. காந்திஜியும் பள்ளி அறையும்

முக்கியமான தொன்றை எதிர் நோக்கியிருந்த சாந்தி நிகேதனத்திலுள்ள யாருமே அன்று நிலைகொள்ளவில்லை. ஒரே உற்சாகம், ஒரே பரபரப்பு. இவ்வெழுச்சியில் மாணவர் ஆசிரியர், ஆண், பெண் ஏன்? மகாகவி

ரவீந்த்ரநாத டாகுர் உள்பட அனைவரும் பங்கு கொண்டனர். காரணமென்ன? காந்திஜி பண்டித நேருவுடன் விஜயம் செய்து மூன்று நாள் அங்கு தங்கப் போகிறார் என்பதே! சீக்கிரமே விருந்தினர் விடுதி தயாராகிவிட்டது. அமைதியை நிலைநிறுத்த மாணவர் தொண்டர் படை நிறுவப்பட்டது. அமைதியே உறைவிடமான சாந்தி நிகேதனத்தின் சாந்தமும், அமைதியும் நிச்சயமாகச் சுற்றுப்புற கிராம மக்களின் முற்றுகையினால் தகர்த் தெரியப் படும் என்பது உண்மையே! குருதேவரின் அழகிய சிறு குடிசையில்தான் வரவேற்பு நடைபெறும். அதன்பின் மனத்தை உருக்கும் இனிய சாந்தி நிகேதனத்தின் பாடல்களைப் பையன்களும், பெண்களும் பாட, ஊர்வலமாக காந்திஜி விருந்தினர் விடுதிக்கு அழைத்துச் செல்லப்படுவார். அதில் ஒரு அறை அவருக் கென நிர்மாணிக்கப் பட்டிருந்தது. சாந்தி நிகேதனத்தின் பிரசித்திபெற்ற கலாபவனத் தின் கலைஞர்களான பேரறிஞர் நந்தலால் போஸின் சிஷ்யர்களால் அவ்வறை அலங் கரிக்கப்பட்டிருந்தது. என்ன வசீகரம்! கவர்ச்சி! சிறிய பச்சிலைகள், மலர்கள், வர்ணம் தீட்டிய மண் பாத்திரங்கள், கையால் நெய்து அச்சடித்த கதர்த் துணிகள்—இத்யாதி! மிகச் சாதாரண பொருள்களே உபயோகிக்கப் பட்டன. ஆனால் அதன் அழகோ—உயிரையே கொள்ளை கொள்ளுவதாக இருந்தது.

காந்திஜி அதிகாலையில் வந்து சேர்ந்தார். அவருடன் நேருஜி, மஹாதேவ தேசாய், காதி பிரதிஸ்தானைச் சேர்ந்த சதீஸ் பாபு ஆகியோர் வந்தனர். கவியின் குடிசையில் புராதன முறைப்படி வரவேற்பு இனிய முறையில் நடை

பெற்றது. குருதேவரே காந்திஜியின் நெற்றியில் சந்தனக் குங்குமப் பொட்டிட்டு ஆலிங்கனம் செய்து கொண்டார். பெண்கள் இனிய கீதங்கள் பாடினர். பின்னர் கவிஞர், அவர்களைத் தத்தம் விடுதிக்கு அழைத்துச் சென்றார். காந்திஜியுடன் அவருடைய அறைக்குச் சென்று, வாசற்படி தாண்டியதும், பாபு ஜோதி மயமான அலங்காரங்களை ஒரு பார்வை பார்த்து, பேரொலியுடன் கடகடவெனச் சிரித்து, "இதெல்லாம் என்ன? என்னை ஏன் மணவறைக்கு அழைத்து வந்தீர்கள்?" எனக் குருதேவைக் காந்திஜி கேட்டார்.

இத் தமாஷில் குரு தேவரும் கலந்து கொண்டார். "கவியின் உறைவிடத்தில் இருக்கிறீர்கள் என்பது கவனத்தில் இருக்கட்டும்" என்றார்.

காந்திஜி இதோடு விடுவதாக இல்லை. "ரொம்பச்சரி, பின் மணப்பெண்எங்கே? என்று அடக்க முடியாத சந்தோஷத்துடன் கேட்டார்.

பெண்களும் அங்கு கூடியிருந்தனர். அவர்கள் நாண முற்றனர் என்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. கவியின் பதில் தக்கதாயிருந்தது. "எங்கள் உள்ளத்திலே சதா சர்வ காலமும் யுவராணியாக வீற்றிருக்கும் சாந்தி நிகேதனம் தங்களை வரவேற்கிறது" என்றார். "அப்படியானால் அவள் பல்லே இல்லாத என் போன்ற கிழவனை பாப்பரை ஒரு முறை பார்த்தால் மறுமுறை என் பக்கம் நிச்சயமாகத் திரும்பவே மாட்டாள்," எனக் கூறினர் பாபு. "ஒருக்காலுமில்லை. எங்கள் ராணி சத்தியத்தை நேசிக்கிறவள். இத்தனை

ஆண்டுகளாக அவள் அதைக் கட்டுக் கடங்காமல் பூஜித்து வந்திருக்கிறாள்,'' என்றார். "ஆகவே, பல்லில்லாத கிழவனுக்கும் நம்பிக்கை உண்டு!'' என்ற பாபு, இன்னும் சில உல்லாசப் பேச்சுகளை உரையாடிய பின், குருதேவ் அவரை ஓய்வு பெற விட்டுவிட்டுத் திரும்பினார்.

மறு நாட் காலை, விருந்தினரைப் பற்றிய அக்கறையுடனும், கவலையுடனும் கவிஞர் விடுதிக்கு வந்தார். அதிகாலையிலேயே அனைவரும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு தயாராக இருந்தனர். காந்திஜி கோஷ்டியாரும் காலை 4-30 மணிக்கே பிரார்த்தனையை முடித்து விட்டனர். எல்லோரும் வெகு சுறுசுறுப்பாக இருந்தனர். பையன்களுக்கும், பெண்களுக்கும் கை வில்லால் பஞ்சடிக்கும் விதத்தை சதீஸ் பாபு விவரித்துக் காண்பித்துக் கொண்டிருந்தார். வில்லின் 'ஹம்' சத்தம் இசைத் தொனி போல் குருதேவருக்கு இனிதாக இருந்தது.

"ஆஸ்ரமப் பெண்களின் இசையையும், ஸிதார் வாத்தியங்களையும் அவமானப் படுத்துகிறீர்களே?'' எனக் குருதேவ் சதீஸ் பாபுவிடம் கேட்டார்.

மஹாதேவதேசாய் பிறிதோர் இளைஞர் கூட்டத்திற்கு நூற்கும் முறையைக் கற்றுக் கொடுத்தார்.

இவற்றையெல்லாம் கடந்து, கவிஞர், பாபுவின் அறையில் நுழைந்தார். ஐயகோ! என்ன கோலத்தைக் கண்டார்! அலங்காரங்களெல்லாம் தாறுமாறாகச் சிதறிக் கிடந்தன. கட்டில் முற்றத்தில் கிடந்தது. ஏனெனில்

காந்திஜி திறந்த வெளியில்தானே வழக்கமாகப் படுப்பது! சித்திரக் கும்பங்களும், பசுமையான இலைகளும் ஒரு மூலையில் தள்ளப்பட்டுக் கிடந்தன. நூல் நூற்பதற்கும், காயிதக் கட்டுகளை வைப்பதற்கும் அந்த இடங்கள் காலி செய்யப் பட்டன. எனவே கேலி செய்வதற்கு இப்போது குருதேவரின் முறையல்லவா? அவர் கேலியாக "ஹரே ராம்" "ஹரே ராம்" மணவறை மறைந்துவிட்டதே! மணமகன் இருப்பதைக் காண்கிறேன்; ஆனால் பாவம்! மணப்பெண் எங்கேயோ ஓடி விட்டாளே!" என்றார்.

குருதேவரை வரவேற்க எழுந்து நின்ற காந்திஜி, சந்தோஷ ஆரவாரத்துடன் "என்ன ஐயா, பல்லில்லாத கிழவனாகிய என்னை எந்தப் பெண்ணும் லட்சியம் செய்ய மாட்டாள் என்பதை முன்பே கூறி எச்சரிக்கவில்லையா? என்றார். இந்தக் குத்தலும், எதிர்த் தாக்குதலும் பார்ப்பவர்கள் எல்லோருக்கும் மிக வேடிக்கையாக இருந்தது. கடவுள்களே தங்களுக்குள் விளையாடுவதாகத் தோன்றியது.

13. அண்ணலும் ஹரிஜன் ரெங்கண்ணுவும்

மதுரையில் ஸ்ரீ சுப்பராமன் வீட்டுக்குச் செல்லும் ரஸ்தாவில் இருமருங்கிலும் திரள் திரளாக ஜனங்கள் கூடியிருந்தனர். அன்று அதிகாலையில் காந்திஜி விருதுநகரிலிருந்து அங்கு வருகிறார். மகாத்மாவின் தமிழ்நாடு ஹரிஜன சுற்றுப் பிரயாணத்தின்போது நடந்த கதை இது. ஒரு தினம் மதுரையில் தங்கிவிட்டு அவர் தேவகோட்டைக்குப் போவதாக ஏற்பாடு. காந்திஜி தனது கோஷ்டியுடன்



சாந்தியும் சத்தியமும்

குறிப்பிட்ட நேரத்திற்குச் சற்று தாமதித்தே சுப்பராமன் வீட்டுக்கு வந்தார். இதற்குக் காரணம் காரில் கோளாறு ஏற்பட்டதே. அவர் வந்ததும் மக்களின் மூர்க்கமான ஆரவாரம் காதைத் தொளைத்தது. பாபு மிகவும் களைப்புற்றிருந்தார்; எனவே, உடனே பூரண ஓய்வு கொள்ள விரும்பினர். அதே நேரத்தில் தேவகோட்டை ஹரிஜன சேவா சங்கத் தலைவர் ஸ்ரீ ஏ. ரெங்கசாமி அய்யங்கார், காந்திஜியிடம் தேவகோட்டை நிகழ்ச்சிகளைப் பற்றி அறிவித்துவிட்டு உடனே திரும்புவதற்காக அங்கு வந்திருந்தார். மறுவிநாடியே அவர் காந்திஜியிடம் சென்றார்; ஹரிஜன் நிதிக்காக ஒரு ஆயிர ரூபாய் நன்கொடையும் அளித்தார். இதைக்கண்டதும் காந்திஜிக்குப் பூரண திருப்தி. "ஆகவே, தேவகோட்டையில் நீங்கள் எனக்களிக்கும் நிதி உங்கள் சொந்த நன்கொடையைவிட, அதிகமாக நான் எதிர் பார்க்கலாமல்லவா?" என ஆவலோடு காந்திஜி ரெங்கசாமி அய்யங்காரைக் கேட்டார்.

பிறகு அவர் சோர்வுடன் "மற்றொருநாள் ஓய்விருந்தால் எவ்வளவு நல்லது. இப்பிரயாணம் அதிக சிரமந்தான்!" என்றார் காந்திஜி.

ரெங்கண்ணுவுக்கு, கருணை மிகுந்தது. அவரை எல்லோரும் பிரியமாக ரெங்கண்ணு வென்றே கூறுவார்கள். தவறுதலுக்குச் சற்றும் அவர் இடம்கொடுக்க மாட்டார். காந்திஜியின் களைப்புற்ற தோற்றத்தைக் காண அவருக்கு வருத்தம் அதிகமாயிற்று. எனவே அவர் காந்திஜியிடம் "இவ்வூர் நிகழ்ச்சிக்குப்பின் ஒருநாள் ஓய்வு கொள்ளுங்கள். தேவகோட்டை நிகழ்ச்சியை அடுத்த தினத்துக்கு ஒத்திப் போடுவோம்!" என்றார்.

காந்திஜி ஆச்சரியத்துடன் "நீங்கள் சொல்லுவது உண்மைதானு? அவ்வாறே செய்வீர்களா? குறிப்பிட்ட தேதியில் நடை பெருவிடில் குழப்பம் இல்லையா? எனக்காக ஒன்றும் செய்யவேண்டாம். நான் சோர்வுற்றிருப்பது என்னவோ உண்மைதான்! இருந்த போதிலும், குறிப்பிட்ட நேரத்தில் நான் புறப் படத் தயார்," எனக்கூறிவிட்டு விஷமச் சிரிப் புடன், "எனக்கு அதிக சிரமம் கொடுக்க நீங்கள் விரும்ப மாட்டீர்கள் தானே!" என்ருர்.

ஆனல், ரெங்கண்ணு, 'ஒருநாள் சுணக் கத்தினல் பிரமாத மொன்றுமில்லை என்றும், அத்யாவசியத் தேவையான ஓய்வு கொள்ளு தல் மிகமுக்கிய மென்றும்,' வற்புறுத்திக் கூறினர். காந்திஜியும் நன்றியறிதலுடன் ஒப்புக் கொண்டு விஸ்ராந்தி கொள்ளச் சென்ருர்; ரெங்கண்ணுவும் வேகமாகத் தேவ கோட்டைக்குத் திரும்பினர்.

மறுநாள் அதிகாலையில் காலை ஆகாரம் உட்கொள்ளும்போது, ஆவேசத்தால் உந்தப் பட்ட ஒரு சிறு கூட்டம் காந்திஜிமுன் தோன் றியது; அவர்கள் தேவகோட்டை வாசிகள். மக்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்படுவதால்,தேவ கோட்டை நிகழ்ச்சியில் ஒரு சிறிதும் மாறு தலே கூடாதென்று காந்தியிடம் விளக்கிக் கூறி, அவரை உடனே அழைத்துப்போக வந் திருந்தனர். காந்திஜிக்கு இது சற்று விநோத மாகத் தோன்றிற்று.

"ஆனல், எனக்கு ஒரு நாள் விடுமுறை தந் தருளிய உங்கள் அன்பான தலைவர் எங்கே? அவரை ஒழித்துக்கட்டி விட்டீர்களா என்ன?" எனக்கேட்டார் பாபு.

இம்மாதிரியான தாக்குதல் பெரிய வேடிக்கையை அளித்தது.

"ஒத்திப் போடுமாறு நான் கேட்கவில்லை; நான் களைப்புடன் இருப்பதை உங்கள் தலைவர் கவனித்தார்; ஒரு நாள் விடுமுறை கொடுத்தார். அன்னாரின் பெருந்தகைமையை உபயோகித்துக்கொள்ளுதல் தவறென்பதை நானறிவேன். ஆயினும், கருணை கொஞ்சம் உள்ளவராகவும், சற்று அதிகமான உறுதியுள்ளவராகவும் இருக்கக்கூடிய வேறொரு தலைவரை நீங்கள் அனுப்பியிருந்தால் இம்மாதிரியான தவறுகள் ஏற்பட்டே யிராது!" எனச் சுட்டிக் காட்டினார். கூடியிருந்தவர்களுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை.

காந்திஜி ஆதியில் குறித்த காரியக் கிரமப் படி நடந்துகொண்டார். மறுநாள் குறிப்பிட்ட நேரத்தில் தேவகோட்டை ஜவாஹர் மைதானத்தில் பிரசன்னமானார். ஹரிஜன நிதிக்கு ஏராளமான பொருள் பெற்றார். பதிலுக்கு நன்றி செலுத்திவிட்டு, மதுரையில் நடந்த சம்பவத்தைக் குறிப்பிட்டார். "நீங்கள் தயாளத்துடன் அளித்த வெகுமதி உங்கள் தலைவரின் தயாள குணத்திற்குச் சமமாகுமா! ஒரு நாள் விடுமுறை அளித்ததை எண்ணிப்பாருங்கள்! உங்கள் தூதினர் கொடுத்த தொந்தரவினால் விடுமுறை கிட்டவில்லை. அதற்கு ஈடாக ஏதாவது இப்பணப் பையில் சேர்ந்திருந்தால் நான் மகிழ்ச்சி யுறுவேன்!" என்றார்.

இச் சிறந்த ஹாஸ்யத்தை, கூட்டத்ினர் அனுபவித்து ஆர்ப்பரித்தனர். இச் சந்தோஷத்தில் காந்திஜியும் கலந்துகொண்டார்.

14. காந்திஜியும் சீன வாலிபனும்

1925-ல் ஒருசமயம் இளம் சீன மாணாக்கன் ஒருவன் இந்தியாவுக்கு வந்தான். காந்திஜியைப்பற்றியும், டாகூரைப்பற்றியும் அவன் கேள்விப்பட்டிருந்தான். அவனே ஒரு கவிஞன்; எதிர்காலத்தில் பிரகாசிக்கக்கூடிய எழுத்தாளனுங்கூட. சாந்திநிகேதனத்திற்கு வந்து, விஸ்வபாரதியில் சேர்ந்தான். விரைவில் பிரசித்த மடைந்துவிட்டான். இருந்தபோதிலும், அபிவிருத்தி தோன்றிக்கொண் டிருந்த சமயத்திலே, ஓர் பெரும் இடுக்கண் அவனுக்கு ஏற்பட்டது. ஒற்றன் என்பதாக அவனைச் சந்தேகிக்கலாயினர். ஆகவே, அவன் மீது கண்காணிப்பு இருந்து வந்தது. இது அவனைப் பெரிதும் வருத்தியது; வெளியேறத் தீர்மானித்தான். ஆனல், அந்நிய தேசத்தில் எங்கு செல்வது? தன்னுடைய துக்கத்தையும், சிரமத்தையும் சாங்கோபாங்கமாக விளக்கி காந்திஜிக்கு ஒரு கடிதம் எழுதினன். அச்சமயம் தேசபந்து சித்தரஞ்சனதாஸ் ஞாபகார்த்த நிதிக்காக, காந்திஜி கல்கத்தாவில் பணம் வசூலித்துக்கொண்டிருந்தார். பத்து லட்ச ரூபாய்க்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்; பெரும் பகுதி வசூலுமாகிவிட்டது. மகாத்மாவின் காரியதரிசி மஹாதேவதேசாய், உடனடியாக அச்சீன வாலிபனுக்கு எழுதியதில் அவனைக் கல்கத்தாவுக்கு வந்து காந்திஜியை சந்திக்கும்படி இருந்தது. சிறிது நேரங்கூட வீணக்காமல் அந்த இளைஞன் உடனே காந்திஜியைக்காண வந்து சேர்ந்தான்.

பாபு அவன் கண்களைக் கூர்ந்து கவனித்தார். பின்னர் அன்பு கனிந்த குரலில், "சாந்திநிகேதனத்தில் உள்ளவர்கள் என் அரிய நண்பர்கள். பிறதேசத்தினரை அவர்கள் எப்போதும் வரவேற்பவர்கள். பின் ஏன் உன்னைச் சந்தேகித்தனர்? உண்மையில் நீ ஒற்றனா?" என வினவினார் காந்திஜி.

அவ்வாலிபன் சூதில்லாத அழுத்தமான குரலிலே "அவர்கள் நல்லவர்கள்; சாந்திநிகேதனம் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. என்னைப்பற்றி யாரோ அவர்களுக்குத் தவறாகக் கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய சந்தேகத்தால் என் மனம் இடிந்துவிட்டது. நான் உளவறிய வந்தவனல்ல; இந்தியாவைப் பற்றி ஆவலுடன் அறிந்துகொள்ள வந்த ஒரு மாணவனே!" என வருத்தத்தோடு கூறினான்.

"உன் சொல்லை நம்புகிறேன். அதை உறுதியுடன் மதித்து, திரும்பவும் உன்னைச் சாந்திநிகேதனத்துக்கு அனுப்பட்டுமா? உன் சொந்த நேர்மையைக்கொண்டு அவர்கள் என் வாக்குக்கு மதிப்புக் கொடுப்பார்கள்" என்றார் பாபு.

அவர் அவனைப்பற்றிய சகல விஷயங்களையும் கிரகித்துக்கொண்டார்; அவனைப் பெரிதும் நேசித்தார். அவன் பூரணதிருப்தியுடன் கண்களில் நீர்ததும்ப, "உங்களோடு இருக்க எனக்கு அனுமதியளியுங்கள். உங்களுடன் தங்குவதற்காக எனக்கு ஆஸ்ரமத்தில் இடங் கொடுங்கள்," என மன்றாடிக் கெஞ்சினான்.

காந்திஜி இயற்கையான புன்னகையுடன், "சரி. ஆனால் சாந்திநிகேதனத்தைக் காட்டிலும், என் ஆஸ்ரமம் மிகக் கடுமையானதா

யிற்றே! கல்வி கற்பதுடன், கடினமான உடல் உழைப்பும் செய்ய வேண்டுமே!'' என்றார்.

தக்ஷணமே அவன், "சீனர்கள் கடுமை யான வேலைகள் செய்யப் பழக்கப்பட்டவர்களே. அதற்கு நான் பயப்படவில்லை,'' என்றான்.

முடிவில், காந்திஜி ஒப்புக்கொண்டார். அவனுடைய சீனப்பெயரை உச்சரிக்க முடியாதென்றும், அங்கு உபயோகிக்க இரு பெயர்களைக் குறிப்பிட்டு, அதில் எதையாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படியும் அவனிடம் கூறினர். இளைஞன் 'சாந்தி' என்ற பெயரையே விரும்பினான். இந்தியாவில் தங்கிய காலம் பூராவும் 'சாந்தி' என்ற பெய ராலேயே அவன் மிகப் பிரபல்ய மடைந்தான். சாந்தி சபர்மதிக்கு வந்த குறுகிய காலத்திற் குள்ளேயே, சாந்திநிகேதனத்தில் ஏற்பட்டது போல -- ஒவ்வொருவருக்கும் வேண்டியவனா ஞன். குழந்தை உள்ளம் படைத்தவன்; குதூ கல முள்ளவன். கருவிகள் துணை யின்றியே ஏராளமான விளையாட்டுப் பொம்மைகளை அவன் செய்து குவிப்பான். அவற்றைக் குழந் தைகளுக்குக் கொடுப்பான். எனவே, குறிப் பாகச் சிறு குழந்தைகள் அவனிடம் அளவற்ற பிரியம் காட்டி வந்தன.

ஆஸ்ரமத்தில், சமையலுக்குத் தண்ணீர் கொண்டுவருவதும், துணிமணிகளைத் துவைப் பதுமான பணிகள் அவனுக்கு இடப்பட்டன. நூல் நூற்பதை வெகு குறுகிய காலத்திலேயே அவன் கற்றுக்கொண்டான்; ஏனெனில், சீனர்கள் விரல்களை உபயோகிப்பதில் சாதுர்ய முள்ளவர்கள். மாதங்கள் சென்றன; அவனி டம் ஓர் சூக்ஷ்மமான மாறுதல் தென்பட்டது.

மிகமிகக் கடுமையாக வேலைகளைச் செய்யலானான். அவனால் செய்ய முடியாத வேலையே இல்லையெனலாம். தோட்டி வேலையும் செய்தான். காந்திஜியின் கட்டுரைகளையும் கவனத்துடன் படித்தான். பிறகு, ஒரு நாள் ஏதோ எழுத உட்கார்ந்தான்; பக்கம் பக்கமாக எழுதித்தள்ளலானான்; அவன் முன்னால் அவை மலைபோலக் குவியலாயிற்று. இராப்பகலாக உழைத்து என்னதான் காகிதத்தில் எழுதிக் குவித்தான்? ஒருவாறாகக் கடைசியில் அவன் அதை முடித்தான்; பக்கங்களைக் கோவையாக எடுத்துச் சரிசெய்தான்; ஊசி போட்டுத் தைத்தான்; அதை எடுத்துக் கொண்டு காந்திஜியிடம் சென்றான்.

"நான் கண்ட பலன் இதுதான் பாபு. சுருக்கமாக என்வாழ்க்கையைப் பற்றியவை இதில் இருக்கின்றன. இந்தியாவுக்கு வருமுன் சிங்கப்பூரில் நூற்றுக்கணக்கான வாலிபர்களைப் போலவே, அவர்களுடன் சேர்ந்து மிருகத்தனமான தூர்த்த வாழ்வை மேற்கொண்டிருந்தேன். தவிர்க்க முடியாத தூண்டுதல் காரணமாக உங்களிடம் என் மனத்தைத் திறந்து காட்டுகின்றேன். தயவு செய்து இந்த கைப்பிரதியைப் படியுங்கள். நான் பரிசுத்தம் பெறுவதற்காக பத்துத் தினங்கள் உபவாசமிருக்க எனக்கு அனுமதி தாருங்கள். உபவாச இறுதியில் உங்களைச் சாட்சியாகக் கொண்டு ஒரு சில பிரதிக்ஞைகளை (விரதம்) எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்." எனக் கூறினான்.

காந்திஜி பிரமிப்படைந்தார். சாந்தி, ஆத்மார்த்திகத் துறையில் சென்று கொண்டிருப்பதை மறு க்ஷணமே அறிந்து கொண்டார்.

"உன் கதை நீளமாக இருக்கிறதே! படிக்க எனக்கு அவகாசம் வேண்டும். நீ எழுதியுள்ளதைப் படித்து விவர மறியும்வரை உபவாசத்தை நிறுத்திவை. பவித்ரமான விசேஷ உரிமையை யுடையது உபவாசம். அதற்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்ள வேண்டும். முதலில் உனது தேவை, தேடுவது யாது என்பனவற்றை, நான் கண்டு பிடிக்கிறேன்," என்றார்.

கதையைப் படிக்க காந்திஜிக்கு வாய்ப்புக் கிட்டியது. சீன வாலிபன் ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொண்டுள்ளதைக் கண்ட காந்திஜி அதிலேயே லயித்து விட்டார். ஆஸ்ரம-வாழ்க்கை அவனுக்கு தன்னைத் தானே சோதிக்கும் தன்மை,பச்சாத்தாபம் கொள்ளல், தன்னைத் தானே திருத்திக் கொள்ளல், போன்றவைகளைத் துரிதமாக உண்டாக்கியது. சாந்தியை அழைத்து, அவனோடு அன்புடனும், பரிவுடனும்; ஆழ்ந்த மன ஒற்றுமையுடனும் அளவளாவினார்; உபவாசத்திற்கு அனுமதி அளித்தார். சாந்தி பத்து நாட்கள் தண்ணீரை மட்டும் அருந்தி வந்தான். இம்மாதிரி ஒரு சீனன் மேற்கொள்ளல், கடுஞ் சோதனையே. அதிலும் இவனோ சாப்பாட்டில் அளவற்ற பிரியமுள்ளவன். ஆயினும் விரதத்தைத் தைரியமாக ஏற்றான். காந்திஜி தினசரி அவனைப் பார்த்து, அவனோடு 15, 20 நிமிஷ நேரம் அளவளாவிப் போவார். தினசரி அவர்களிருவருக்கும் நடந்த இந்தச் சம்பாஷணைகளில் என்ன நடந்த தென்பதை யாருமே அறிய மாட்டார்கள். ஆனால், சாந்தி மிகுந்த உற்சாகத்துடன் இருந்தான். தூய்மையின் உண்மையையும், மதிப்பையும், விரதத்தின் புனிதத் தன்மை

யையும் பற்றிக் காந்திஜி அவன் மனதில் பதியுமாறு கூறியிருக்க வேண்டும்; 'எவ்விரதமும் தானுகவே மனதில் எழும்பி, ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் அதை எடுத்துக் கொள்ள வேண்டும்' என்பது காந்திஜியின் கருத்து. சற்றே உணர்ச்சியால் ஈர்க்கப்பட்டு, அதைச் சாதாரணமாகக் கொண்டு ஆரம்பிக்கும் விரதம் மிக மோசமானதாகும். பத்து நாள் உபவாசத்துக்குப் பின் சாந்தி சில பிரதிக்ஞைகளை எடுத்துக் கொண்டான்; தன்னைப் பூரணமாக அறிந்த பின்பே இவற்றைச் செய்தான். அவைகளை இரு தாள்களில் எழுதி கையெழுத்திட்டான்; சாட்சியாகக் காந்திஜி ஒப்பமிட்டார். ஒன்றைத் தனக்காகக் காந்திஜி வைத்துக் கொண்டார்; மற்ருென்றை சாந்தி எடுத்துக் கொண்டான். ஓர் பெருஞ் சுமையை இறக்கியவன் போலத் தான் அங்கிருந்து போனதாகப் பிற்காலத்தில் சாந்தி அடிக்கடி கூறிக்கொள்வதுண்டு.

கடைசியில் சாந்தி சீனுவிற்குத் திரும்பினுன். ஓர் பத்திரிகாசிரியராக இருந்து அதை நடத்தி வந்தான். ஆசிரியராகத் தன்னைச் 'சாந்தி' என்றே போட்டு வந்தான். 'காந்தியத் தத்துவங்களை சீனுவில், சீன மக்களிடையே விளக்கிக் கூறுவதே' அவனுடைய பெருத்த அவாவாக இருந்தது.

15. பாபுவும் புரட்சிக்காரனும்

சேவா கிராம விருந்தினர் விடுதியின் தாழ் வார மூலை, ஆஸ்ரம வாசிகளுக்கு ரொம்பப் பிடித்தமானதோர் இடம். அடிக்கடி பகலில் நாங்கள் அந்த இடத்தில் ஏகாந்தமாகக் கூடிக்

கற்பனைக்கும் எட்டாத பல விஷயங்களைப் பற்றி சர்ச்சை செய்வதுண்டு. அப்படிப்பட்ட ஒரு நேரத்தில்தான் **அவன்** அங்கு வந்து எங்களோடு கலந்துகொண்டான். **அவன்** ஏதோ ஒரு மாகாணத்திலிருந்து வந்தான்; ஓரளவு பிரக்யாதி யடைந்தவனுங் கூட, எங்களோடு வந்து உட்கார்ந்தானோ இல்லையோ, அளவற்ற உற்சாகத்துடன் சம்பாஷணையில் தீவிரமாக ஈடுபடலானான்.

இகழ்ச்சிக் குறிப்புடன், "ஓ! எங்கள் மாகாணத்தில் காந்திஜியைக் கடவுளாகக் கொண்டாடுவோர் எவரும் இல்லை. அப்படி ஒரு போதும் நாங்கள் செய்ய மாட்டோம்," என்றான்.

[ஆழ்ந்த ஒரு யோசனை] "நாங்கள் அவரை ஒரு தலைவராகவே எண்ணுகிறோம். அதிலும், இக்கணம்வரை தலைமைப் பதவியிலிருந்து அவர் செய்துள்ளவற்றைக் காண அதிருப்தியும் கொள்கிறோம்," என்றான் அலட்சியமாக.

இன்னும் பல விஷயங்களைத் தெளிவுடன் உணர்ந்து கூறினான். அவைகளைக் கேட்டு ஆழ்ந்த சிந்தனையில் மூழ்குவதைத் தவிர எங்களால் வேறென்ன செய்யக்கூடும்! மேலும் **அவன்** பாபுவுடன் தெள்ளத் தெளியப் பல விஷயங்களைப் பற்றிப் பேசித் தர்க்கிக்க வந்திருக்கிறானாம். இதைச் செவி யுற்றதும் உணர்வு மயமானோம், **அவனோ** ஆனந்த பரவசமுற்றான். "எங்கள் மாகாணத்தில் நாங்களெல்லோரும் புரட்சிக்காரர்கள்; அதிகாரத்தைக் கைப்பற்ற அவசரப்படுகிறோம்," என **அவன்** சவால் விடுவதே போலக் கூறினான்.

அவனுடைய வாதம் உள்ளங்கை நெல்லிக் கனியே போலத் துலங்கியது. பாபு தன்னைப்

போன்ற, புரட்சிவாதி யல்ல வென்றும், அவருடைய முறைகளால் இந்தியாவின் சுதந்திரம் தள்ளிப் போகிற தென்றும் **அவன்** எண்ணினன்.

பேட்டி பிற்பகல் ஏற்பாடாயிற்று. சமயம் நெருங்க நெருங்க பெரியமலையுடன் **அவன்** எவ்வாறு மோதப் போகிருன் என்பதையே நினைத்து ஆர்வமுடன் கவனித்துக் கொண்டிருந்தோம். ஏனென்ருல், பயங்கரமான புரட்சிக்காரன் என்று, தன்னைக் கூறிக்கொள்ளும் **அவன்**, பாபுவின் மண் குடிசையில் நுழையும் போது நடுங்கிக் கொண்டே சென்ருன். பாபுவோடு ஒருமணி நேரம் பேசிக்கொண்டிருந்தான்.

மீண்டும் அன்று மாலை இறுதி நேரத்தில் வழக்கம்போலத் தாழ்வாரத்தின் மூலையில் **அவனைச்** சந்தித்தோம். காந்திஜியின் மாலைப் பிரார்த்தனையில் கலந்து கொண்டதும், நேரே அங்கு எங்களோடு சேர வந்தான். எப்படிப் பட்ட மாறுதலை அவனிடம் கண்டோம். என்ன! **அவனுடைய** வீம்பும் கர்வமும் எங்கே போயின! அமைதியுடன் **அவன்** உட்கார்ந்தவுடனே நாங்களே அவனைப் பேச்சுக்கு இழுத்தோம்.

"பாபுவிடம் எவ்வாறு சமாளித்தாய்? உன் பகுதியில் செல்வாக்கு இழந்து வருவதைப் பற்றி நீ கூறினுயா? எனக் கேட்டார் எங்களில் ஒருவர்.

இப்போது **அவன்** மன்னிப்புக் கோரும் தோரணையில் "நாங்கள் அறிவீனர்கள் என்பது தெரியுமா? என்ருன்.

நாங்கள் ஒருவரும் குழப்பமுறவில்லை. 'அது என்ன ஐயா?' என ஒருவர் துணிவுடன் கேட்டார்.

ஆனல் அவனே, காகிதக் கட்டுகளைப் புரட்டிக்கொண்டு சிறிய விளக்கின் ஒளியில் தோன்றிய, பரிசுத்தத் தன்மை கொண்ட பாபு-இருக்கும் சிறு குடிசைப் பக்கம் திரும்பி உற்றுப் பார்த்தான்.

"ஒன்றுமில்லை; அச்சிறிய மனிதர் ஒருவர் தான் நம் தேசத்தின் உண்மையான புரட்சிக்காரர். பேச்சிலும் கோஷம்செய்வதிலுமே நாம், நம் நேரத்தைப் போக்குகின்ருேம்; அவரோ காரியத்தில் காட்டுகின்ருர். ஒரு சில சாந்தமான சொற்களால் அவர் என்னைக் கடினமான அனுபவ உலகத்திற்கு இறங்கி வரச் செய்தார். அவர்தான் நமது அதிசிரேஷ்டரான யதார்த்த வாதி" எனப் பதிலுரைத்தான் **அவன்!**

அவன் உணர்ச்சிப் பெருக்கில் மூழ்கினன். எங்களுக்கோ, குதூகலம் ஏற்பட்ட போதிலும் அதை மறைத்து அவனோடு உணர்ச்சியில் பங்கு கொண்டவர்களானேம்.

அதன்பின், அவன் ஒன்றுமே பேசவில்லை. நாங்கள் கூறியவைகளைப் பொறுமையுடன் கூர்ந்து கேட்டான். ஏதோ கடுமையாக **அவன்** சிந்திப்பது புலப்பட்டது. இரவு திரும்பியவுடனே இச்சம்பவம் உண்மையில் மிகப் பிரயோசனமான, கொண்டாடத்தக்க ஓர் அறிகுறியே என எண்ணினேம்.

புதிய நூல்கள்

	ரூ	அ
டில்லி செங்கோட்டை விசாரணை	3	0
கம்பன் பிள்ளைத் தமிழ்	1	0
கவிதைக் கதம்பம்	1	6
விறலி விடு தூது	2	8
காதற் பாட்டு	3	0
காந்தீய வழி	2	12
கமலா	1	0

இனிவரும் நூல்கள்

காந்திஜியுடன் சுற்றுப் பிரயாணம்
கல்லும் சொல்லாதோ கவி
வைத்திய சாஸ்திரம்
இலக்கிய மன்னன்
கம்பனில் அவலம்
நந்திக் கலம்பகம்
புறத் திரட்டு
மீனுமிர்தம்

இலக்கியப் பதிப்பகம்

அம்மன் சன்னதி, காரைக்குடி.

S. I. P. Karaikudi. R-10. 13-8-47 1500.